# திராவிடநாடு

மலர் 14 | விலை 2 அணா | இதழ் 10



# கடிவாளமற்ற குதிரை

"நான், வியாபாரி, உற்பத்தியாளர் என்ற ஹோதாவில் பேசுகிறேன்; எங்களை எல்லாம் பலமுனை விற்பனை வரி பாதிக்கிறது"

**மிஷ்ரி**

"வரி கொடுக்காமல் எப்படி எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதை வியாபாரியாகிய நாங்கள்தான் எடுத்துச் சொல்லவேண்டும்"

**காஜி**

"இதுபோன்ற விஷயங்களில் வியாபாரிகளுக்கு வக்கீலாக உள்ள நாங்கள்தான் யோசனை சொல்லவேண்டும்"

**மிஷ்ரி**

மன்றத்தினர் சிரித்தனர். கேள்வி கேட்டவர் மடக்கப்பட்ட திறத்தைக் கண்டும், கேள்வி பதில் இரண்டிலுமே ததும்பிக் கிடக்கும் தேனை உண்டும், மன்றம் மகிழ்ந்தது. நாடக மேடைக் காட்சி போலும் என்று எண்ணுவீர்கள். அல்ல, அல்ல, நாடாள்வோர் கூடி, நல்லது கெட்டது கண்டறிய அறிவாராய்ச்சியில் ஈடுபடும் சட்டசபையில்—மத்யப் பிரதேசத்தில்.

மிஷ்ரியும் காஜியும் உறுப்பினர்கள், மன்றத்தில்; பொருள் என்ன? பல இலட்சக்கணக்கான மக்களுடைய வாக்குகளைத் தேர்தலின் போது பெற்று, நாட்டு ஆட்சியை நல்ல முறையுள்ளதாக்குவதற்கான பணியாற்ற ஆட்சி மன்றத்தில் அமர்ந்திருக்கும் அரும்பேறுபெற்றவர்கள் என்பது பொருள். பொறுப்பான பணியாற்றும் இவர்களுக்கு ஊதியமும் உண்டு — இதற்கான பணம், ஏழை மக்களின் கண்ணீரும் செந்நீரும் வியர்வையும் பெற்றுத் தருகிறது.

மிஷ்ரி, வியாபாரி. காஜி, வக்கீல்.

வியாபாரி ஏய்த்து வாழ்கிறது குறித்தும், அவனுக்கு அதனைத் திறம்படச் செய்வதற்கு வழி வகுத்துத் தரும் திறமையை வக்கீல் தருவதுபற்றியும், நகைச்சுவை ததும்ப உரையாடுகிறார்கள், நாடாள வந்தவர்கள்!

ஏழையை வாழவைக்கும் வழி யாது? எளியோரின் துயர்துடைக்கும் திட்டம் எங்ஙனம் இருத்தல் வேண்டும்? வளம் பெருகவும், பெருகிய வளம் மக்களுக்கு வழங்கப்படவும் வழிவகை காண யாது செயல்முறை? வரிச்சுமை முதுகெலும்பை வளைக்க, வறுமை கண்ணொளியைக் கெடுக்க, குடும்பத் தொல்லை குலைநோயைக்கொடுக்க, குன்றிக் குமுறிக்கிடக்கிறானே உழைப்பாளி, அவனுக்கு வாழ வழி வகுத்திட அனைவரும்கூடி அறிவாற்றலைத் திரட்டிப் பணியாற்றலாம், என்று அன்பும் அறமும் பூத்திடும் நெஞ்சினர், ஆட்சி மன்றம் அமருகின்றனர்—குடி ஆட்சியின் மாட்சியே அதுதான் என்று ஏடுகளிலே படிக்கிறோம்; இதோ நாட்டாட்சி மன்றமொன்றில், வக்கிலும் வியாபாரியும், ஏய்க்கும் முறைபற்றி, வேடிக்கையாகப் பேசுகின்றனர், அந்த நகைச்சுவையைப் பருகி மன்றத்தினர் நகைக்கின்றனர்! நல்லநாடு, நல்ல ஆட்சி!! வரிகளைத்தராமல் ஏய்க்க வியாபாரிக்குத் தெரியும், வியாபாரி அதைத்தான் செய்துவருகிறார் என்கிறார் வக்கில், எங்களுக்கு இந்த வழிகளை எல்லாம் சொல்லிக் கொடுப்பவரே, வக்கீலய்யாதான் என்கிறார் வியாபாரி, வியாபாரியையும் வக்கீலையும் உடனிருப்போராகக் கொண்டுள்ள உறுப்பினர்கள், பளா, பளா, என்று கூறிச் சிரித்து மகிழ்கிறார்கள்.

"பாவம், அந்தப் பாவையின் வளையை நொறுக்கினான் இந்தக் காமுகன்" என்கிறான் ஒருவன்.

"பெண்ணை, உன் வழிக்குக் கொண்டுவர வேண்டுமானால், அவள் கரம்பற்றி இழு, வளை ஒடியும், ஒடிந்த வளையைக்கண்டு அவள் கலங்குவாள், அதேபோது, விடாதே, கட்டிப்பிடித்துக்கொள் என்று வழிசொல்லிய ஆசிரியன் நீயல்லவா"? என்று கேட்கிறான் காமுகன், இதுபோல செய்ததை எண்ணியும், செய்யும் வாய்ப்புக் கிடைத்தால் செந்தேனென இனிக்குமே என்று நினைத்துக்கொண்டும் சிரித்தனர், உடனிருந்தோர். இப்படி ஒரு கதை கூறினால்கூட, கண்ணியவான்களின் முகம் கடுகடுக்கும். இதோ, மாதச் சம்பளம் பெற்றுக்கொண்டு, மக்கள் பணி புரிவதாக விருது பொறித்துக் கொண்டு, வக்கீலும் வியாபாரியும் 'ஏய்த்திடும்' முறைபற்றி, ஒருவருக்கொருவர் வார்த்தைச் செண்டுகளை வீசிக் கொள்கிறார்கள்—இந்த பூப்பந்தாட்டத்தைக் கண்டு, மற்றவர் மகிழ்கிறார்கள். எப்படி இருக்கிறது நாட்டாட்சியின் மாண்பு, என்ன எண்ணுவான் ஏழை? கேலி பேசிச் சிரித்திடவும் வாதம் புரிந்து மகிழ்ந்திடவும்தான் இவர்கள் மன்றத்தில் அமர்ந்திருக்கிறார்கள்-நம்மைக் காப்பாற்ற அல்ல,-என்று எண்ணி ஏழை கண்ணீர் வடிக்கிறான்.

(13–ம் பக்கம் பார்க்க)

## வருந்துகிறோம்

காஞ்சிபுரம் நமது கழகத்தோழர் வே. சுந்தரம் அவர்களின் குமாரிகள் நிலாம்பாள், காந்திமதி கடந்த ஆ-26, செ-2-ந்தேதிகளில் காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம். செல்வங்களை இழந்து துடிக்கும் தோழருக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

* * *

தஞ்சைமாவட்ட தி.மு.க. பிரதிநிதி சே.ப. சேதுபதி, ஆசிரியர் சே.ப. சதாசிவம் ஆகியோரின் தந்தையான திரு. சே. பெரியசாமி தஞ்சராயர் அவர்கள் கடந்த 28-ந்தேதி திருவாரூரில் காலமான செய்திகேட்டு வருந்துகிறோம். தனயர்களுக்கும், குடும்பத்தாருக்கும் நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்கள்.

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

காஞ்சி] 11—9—55 [ஞாயிறு

# பண்டிதர் பவனி --ஒரு "இடைவேளை"

நேரு பண்டிதர் வருகிறார்! காங்கிரசின் மேருவைக் காணுங்கள், கந்தசாமிக்கு ஓட்டுப் போடுங்கள், ஆசிய ஜோதியைப் பாருங்கள், அற்புதராஜுக்கு ஓட்டுப் போடுங்கள், சோவியத்கண்ட சோர்விலாத் தலைவரைக் காணுங்கள், சோணாசலத்துக்கு ஓட்டுப் போடுங்கள், ஐயன் வருகிறார், ஐந்தாண்டுத் திட்டம்பற்றி நீவிர் கொண்டுள்ள சந்தேகத்தை விட்டொழியுங்கள், அவனி புகழ் அதிபர் வருகிறார், அல்லல் அவதி ஆகியவற்றை மறவுங்கள், அவர் சென்னையில் பேசுவார், வேலூர் வருவார், காரைக்காலும் புதுவையும் அவரைக் காணும் பாக்யம் பெறும்; காஞ்சியை அவர் மறக்கவில்லை, காங்கிரசாட்சி கவலையைப் போக்கவில்லை, கஷ்டத்தைத் துடைக்கவில்லை என்று கண்ணீர்விடுகிறீர், கண்டனமும் கிளப்புகிறீர், இதோ மோதிலால் திருக்குமாரர், பாரத ரத்னம், பண்டித நேரு, பவனி வருகிறார், பராக்! பராக்! என்று கட்டியம் கூற ஆரம்பித்துவிட்டனர். முதலமைச்சர் காமராஜர், முன்னாளில் ஆச்சாரியார் நடத்திக் காட்டிய வைபவத்தை எல்லா வகையிலும் மிஞ்சக்கூடியவிதமாக, இப்போது நேருவை வரவேற்கவேண்டும் என்று, முன்னேற்பாடுகளை மும்முரமாகச் செய்து வருகிறார். நாடு, ஒரு நாலு நாளைக்கு நேருவின் 'தரிசனம்' காண்பதிலும், அவர் கூறும் 'தேசியம்' பருகுவதிலும் ஈடுபடவேண்டும் என்று நாடாள்வோர் பணித்துவிட்டனர். முரசுகள் முழங்கட்டும், மகர தோரணங்கள் தயாராகட்டும், ஆரத்தி எடுக்கும் ஆரணங்குகாள்! அணி அலங்காரம் முதல்தரமாக அமையட்டும், பல நாடுகளின் வண்ணங்களைக் கண்டு களித்த நேரு வருகிறார்! பாவாணர்காள்! பல நாடுகளிலே புகழுரை கேட்டுப் பெருமிதமடைந்துள்ள நேரு வருகிறார், புத்தம் புதுக் கவிதை தீட்டுங்கள், இந்தியப் புவியாளும் மன்னன்முன் நீட்டுங்கள். நாட்டிய ரமணிகளே! தென்றல் நடனம், தேன் தேடும் வண்டு நடனம், அன்ன நடனம், அமிர்த கலசம் ஆட்டும் நடனம் என்று பல்வேறு வகையான நடனங்களைப் பல்வேறு நாட்டினர் பாங்குடன் காட்டினர்; அவர் பார்த்துப் பரவசமடைந்தார்; அந்தப் பண்டிதர் வருவதால், இடை நெளியும் கடை சுழலும் காட்டவல்ல கட்டழகிகளே! பரதம் அறிந்த பாவையரே! கதகளி கற்ற காரிகைகாள்! தேனிடையூறிய செம்பவள இதழ்ச் சேயிழைகாள்! புதுப்புது நடனமாட வாரீர். இதழாசிரியர்காள்! உங்களுக்கு நல்வாய்ப்பு. அவர் நின்ற திருக்கோலம், நெரித்த புருவத்தோடு பார்க்கும் காட்சி, போலீஸ் காவலைத் துளைத்துக்கொண்டு அவர் மக்களைக் காண ஆவலுடன் ஓடும் காட்சி, நண்பரின் மதலையின் கன்னத்தைக் கிள்ளிக் களித்திடும் காட்சி, குதலைவாய்க் குழவிகளுடன் கொஞ்சிடும் காட்சி, இவை எலாம் படமாக்கிப் போட்டுப் பாமரர்க்கு விருந்தளித்து, பலன்பெற வாய்ப்பு வருகிறது; கிளம்புக, கிளம்புக, நேரு பண்டிதர் வருகிறார்!

இவ்வண்ணம் எடுத்தியம்பி, மக்களைத் திரண்டு வரச் செய்து, நேருவின் பவனியை, கண்கொள்ளாக் காட்சியாக்கி, அதன்மூலம் 'ஓட்டு'களைக் குவித்துக்கொள்ளவும், பொதுவாகவே வளர்ந்தபடி உள்ள எதிர்ப்பு உணர்ச்சியைக் குறைத்திடவும், காங்கிரஸ் தலைவர்கள் முயற்சிக்கின்றனர்.

இன்று காங்கிரசிடம் உள்ள 'துருப்புச் சீட்டு' நேரு பண்டிதர்.

முனிசிபல் தேர்தலுக்கே இந்தத் 'துருப்புச் சீட்டு' பயன் படுத்தப் பட்டால் நல்லது என்று கருதும் காங்கிரஸ்காரர்கள் ஏராளமாக உளர்.

பஞ்சாயத்துத் தேர்தல்களுக்கும் பண்டிதரின் பவனி பயன்படட்டுமே என்று கூசாது கேட்கும் கதருடையினர் உள்ளனர்,

எப்படியோ வொன்று, நகராட்சிகளுக்கு நடைபெறும் தேர்தல்களுக்கு முன்பு, நாட்டு மக்களை பல்வேறு இடங்களில் பெருமளவுக்குக் காங்கிரஸ் தலைவர்கள் கூட்டிப் பார்த்திடும் ஓர் வாய்ப்பு, நேருவின் பவனியால் கிடைக்கிறது.

மாபெருங் கூட்டம் கூடவேண்டுமானால், நேருதான் தேவைப்படுகிறார் என்று, அவர் பெருமையை அறைவதாகக் கருதிக்கொண்டு சில காங்கிரஸ் தலைவர்கள் கூறுகிறார்கள்—அந்தோ, பரிதாபம், தங்களை எல்லாம் மக்கள் 'சீந்தவில்லை' என்பதை வெட்கமின்றி வெளிப்படுத்திக் கொள்கிறார்கள் — மறைமுகமாக.

பவனி, பளபளப்பும் விறுவிறுப்பும், பூரிப்பும் களிப்பும் நிரம்பியதாக இருக்கும்—தேர்தலில் பலனும் கிடைக்கக் கூடும் — நாலு நாளைக்கு நாட்டு மக்கள் காங்கிரஸ் கட்சியின் பக்கம்தான் நிற்கிறார்கள் என்ற மன மயக்கம் கூட நிச்சயமாக ஏற்படக் கூடும். ஆனால் இந்தப் பவனிகளாலும் படாடோபங்களாலும் போக்கிட முடியாததோர் கசப்பு மக்களிடம் மிகுந்து கிடக்கிறது.

பட்டம் பறிபோவதற்கு நாட்கள் மிகச் சிலவே இருந்தபோதுங் கூட, சில மாமன்னர்கள், மகத்தான பவனிகளைக் கண்டு களித்தனர் என்று வரலாறு காட்டுகிறது. மக்களாட்சிக் காலத்திலோ என்றால், இத்தகைய பவனிகளின் மூலம், நிச்சயமாக, ஆட்சி மூட்டிவிட்ட கசப்பைப் போக்கிவிட முடியாது.

இங்கே மக்கள் திருவிழா காண்பார், அது முடிந்ததும், பசித்தீக்குப் பதிலளிக்க முடியாது தேம்புவர், அறுபதுக்குப் பிறகும் இளைஞராக நேரு இருக்கும் நேர்த்தியைக் காண்பர், முப்பதிலேயே முதுமையின் பிடியிலே சிக்கித் தவிக்கும் மக்கள்!! அவருடைய புன்னகையைக் காண்பர், வீட்டில் கண்ணீர் உகுத்திடும் பெண்டிரைக் காண்பர்.

நல்லதோர் நாடு, உலகே நமது நாட்டைப் புகழ்கிறது, உலகெல்லாம் நமது புகழ் ஓங்கி வளர்ந்திருக்கிறது, என்று நேரு பண்டிதர் கூறுவார், கேட்பர், களிப்பர். மறுகணமோ அவர்களுக்கு, உலகம் எதைக் கண்டு புகழ்கிறது? இங்கே உள்ள வறுமையையும் அதனால் வளர்ந்து அதனை மேலும் வளர்த்து விடும் 'ஜனத்தொகைப்

பெருக்கத்தையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும், முடைநாற்ற மடிக்கும் மூடத்தனத்தையும், ஜாதி பேதம் தலைவிரித்தாடுவதையும் மதப் பூசல்கள் மண்டைக் குடைச்சலாகி இருப்பதையும் ஒளி இழந்த நகர்களையும் இருண்ட கிராமங்களையும்—இவைகளைக் கண்டா உலகம் இந்த நாட்டைப் புகழப் போகிறது, —என்று தம்மைத்தாமே கேட்டுக் கொள்வர்—திடுக்கிட்டுப் போவர்.

நான் ரஷியா சென்றேன், ஸ்டாலின் கிராட் நகரம் கண்டேன், இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளைப் பார்த்தேன், பிரமித்துப் போனேன். அங்கே உள்ள மக்களுக்கு உடல் எஃகு, உள்ளம் என் பால் பாகாய் உருகிடக் கண்டேன். முகம் மலர்! கன்னம், ஆப்பிள், வண்ணம், வெளிர்ச் சிகப்பு, ஆடலும் பாடலும் முதல்தரம், கல்வி மணம் கமழ்கிறது. அறிவாலயங்கள் ஆயிரமாயிரம், விஞ்ஞானக் கூடங்கள் பலப்பல.—கண்டவரல்லவா, களிப்புடன் இவை பற்றி நேருபண்டிதர் கூறக்கூடும்—கேட்போர் வாய்பிளந்து நிற்பர் ஒரு கணம், மறுகணமோ மக்கள் மனக் கண்முன், முழங்காலளவு சேற்றில் இறங்கி உழுது, உச்சி வேளையில் சுருண்டு, மீண்டும் எழுந்து உழைத்து, மாலையில் சக்கையாகி, குடிசைக்குள் திரும்பி, சத்தற்ற நிலையை அடைந்துள்ள துணைவியைக் கண்டு துயருற்றுத் துடித்திடும் காட்சியும், ஆலையில் பாடுபட்டு அரைவயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லாமல் பாட்டாளி அவதிப்படும் காட்சியும், வேலையற்றோரின் முகத்தின் கவலையும், இல்லாமையால் இடர்ப்படுவோரின் ஏக்கமும், கல்விக்கூடங்களிலே பஞ்சமும், மருத்துவ மனைகளில் போதாமையும், நாட்டிலே எல்லா முனைகளிலும் தரித்திரத்தின் தாண்டவமும், தெரியும்—தெரிந்ததும் திகைப்பர்.

ஒரு நாலு நாளைக்கு நேருபண்டிதரைக் காண்பர்—பிறகு வழக்கமாக அவர்கள் காண்கின்ற பசியும் பிணியும், அகவிலையும் அல்லலும், அவர்களை அருகே அழைத்து, கேலிச் சிரிப்பொலி கிளப்பிவிட்டு, பிறகு, "பேதையே! பேதையே! பெரியதோர் விழா கண்டோம் என்று பேசிப் பூரித்துப்போகிறாயே, உங்கள் நேருபண்டிதர் புகழின் உச்சியில் இருக்கிறார், அதைக் கண்ட நீ இருக்கும் இடம் எது என்பதை மறந்தாயே, நானல்லவா உன்னோடு எப்போதும் இருக்கிறேன். நேருபண்டிதரைக் கண்டுவிட்டதாலே, களிப்படைகிறாயே, அவர் என்ன, எப்போதுமா உன்னோடு இருக்கப்போகிறார், அல்லது அவரைக் கண்டு களித்த உனக்கு அவர், உணவு, உடை, உறைவிடம், கல்வி, இவைகளைக் குறைவின்றிப் பெறும் "வரம்" தந்தா சென்றார், பழையபடி, உன்னை என்னிடம்தானே ஒப்படைத்து விட்டுச் சென்றிருக்கிறார். வா, வா, ஒரு நாளைக்குத் திருவிழா, மறுநாள் முதல் நீ என்னுடன் இருந்துதானே காலந்தள்ள வேண்டும்." என்று கேலி பேசி, பசியும் பஞ்சமும் பட்டினியும் வறுமையும் பாமரனை அழைத்திடுகிறது காண்போம்.

உள்ளவர் ஒருவர், மக்களைத் திரட்ட — மயக்க — நம்பிக்கையூட்ட — பிரமிப்புத்தர! அவரையும் மிக அதிகமாகப் பயன்படுத்தி, அவருக்கு உள்ள சொக்கச் செய்திடும் சக்தியையும் சிதைத்துக் கொண்டு வருகிறார்கள். நேருவின் பவனி, காட்சிகளிலே களிப்புப் பெறுவோருக்கு விழா. ஆனால் பிரச்சினைகளை அறிந்தோருக்கு, இது "இடைவேளை"—அவர்களின் அன்றாட 'வேதனை நாடகம்' மீண்டும் தொடங்குகிறது என்றுதான் பொருள்.

வந்தார், சென்றேன். பேசினார்' கேட்டேன். கண்டார், கைதட்டினேன். கார்வேகமாகச் சென்றது, தூசி மிகுதியும் கிளம்பிற்று. ஜே, ஜே, என்றனர், மக்கள். போ, போ, என்று துரத்தினர் போலீசார்.

இவ்வண்ணம் உரையாடல் ஊர்களில், சில நாட்களுக்கு! பிறகு எப்போதும்போல, அவர்களை வாட்டி வதைத்திடும் வறுமை அவர்களைப் பேசவைக்கும்.

**வரி அதிகம் வறுமை வளருகிறது**
**வடநாடு வாழ்கிறது தென்னாடு தேய்கிறது**
**ஐந்தாண்டுத் திட்டம் ஒரு ஓரவஞ்சனை**
**இந்தி ஆதிக்கம் ஒரு சதித்திட்டம்**
**சென்னை மந்திரிகள் சிங்காரப் பதுமைகள்**
**டில்லி ஏகாதிபத்யம் ஆட்டிப்படைக்கிறது**
**தனியாக வாழ்ந்த நாம், தாதராளேம்**
**தனி அரசு இழந்தோம் தவிக்கிறோம்**
**திராவிட நாடு திராவிடருக்கே.**

இந்த எண்ண அலைகள் மீண்டும் கிளம்பும். விழாக்காட்சி, கனவில் கண்ட கனியாகும்.

உள்ள நெகிழ்ச்சிக்கு ஆட்படுவோருக்கே இந்த நிலை ஏற்பட்டுவிடும் என்றால், விளக்கம் பெறத்தக்க ஆராய்ச்சி மனப் போக்குடையோர் மனமோ, விழா நாளன்றே, விழா காணும் போதே கூட,

**நேருவுக்கு நாம் அளிப்பது ராஜோபசாரம்**
**நேரு நமக்கு அளிப்பதோ பெரும் விசாரம்**

என்று தான் எண்ணிடும்.

★


## செப்டம்பர் 17–23
# நாட்டுப் பிரிவினை வாரம்!

தோழர்காள்!

## தி. மு. க. 7-வது ஆண்டு விழா

கொண்டாடுக !!

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர்.




**தம்பி,**

புதிதாகப் பதவியேற்ற பிரன்ச்சு அமைச்சர், அலுவலகத்தைப் பார்வையிடச் சென்றார் — முதல் அறையில் பணியாளர் இல்லை! இரண்டாவது அறையிலும் யாரும் இல்லை! மூன்றாவது அறையில், நாற்காலியில் உட்கார்ந்தபடி ஒரு பணியாளர் உறங்கிக்கொண்டிருந்தார்! அமைச்சருடன் வந்தவர், உறங்கிக்கொண்டிருந்தவரை எழுப்புவதற்காக அருகே சென்றார். அமைச்சர் அவரைத் தடுத்து நிறுத்தி, "வேண்டாம்! வேண்டாம்! அவரை எழுப்பிவிடாதே! எழுந்தால், அவரும்; மற்ற இருவரும் வெளியே சென்றுவிட்டதுபோல அலுவலகத்தைவிட்டுப் போய்விடப்போகிறார்!" என்று கூறினாராம்.

ஒருவர்கூட அலுவலகத்திலே இல்லாதிருப்பதைவிட, உறங்குபவர் நிலையிலாவது ஒருவர் இருக்கட்டும், என்று அமைச்சர் எண்ணிக் கொண்டார்போலும்.

பொறுப்பற்ற தன்மை எந்த அளவுக்கு இருந்தது என்பதை இந்த நிகழ்ச்சி விளக்குவதாக இருக்கிறது.

பிரன்ச்சு அமைச்சர் உறங்கிக் கிடப்பரை எழுப்பிவிடாதீரய்யா, அவரும் வெளியே போய்விடப் போகிறார் என்று கூறி, வேதனையை நகைச்சுவையால் மாற்றினார்.

இன்று நமது திரு இடத்தில் ஓரோவழி ஒருவரிருவர், இங்கொன்றும் அங்கொன்றுமாக, மொழி, நாடு, இனம், என்பன குறித்து ஒருசிறிது பேசும்போது அவர்கள் இவ்வளவுதானா கூறுவது, அவர்களின் பொறுப்பும் பணியும் இந்த அளவோடா முடிந்துவிடல்வேண்டும், அவர்தம் அறிவாற்றலுக்கு ஏற்ற அளவுக்கா இப்பணி இருந்திடக் காண்கிறோம் என்ற எண்ணம் நமக்கெல்லாம் எழத்தான் செய்கிறது. தம்பி! அத்தரத்தினர் மீது நீ கோபித்துக்கொள்ளும்போது, எனக்கு அந்தப் பிரன்ச்சு அமைச்சருக்கு ஏற்பட்டது போன்ற கவலைதான் பிறந்துவிடுகிறது.

இவர்களைக் கோபித்துக்கொண்டால் இவர்கள் இதனையும் கூறாதிருந்துவிடின் என்ன செய்வது— ஏதோ இதையாவது சொல்கிறார்களே — ஓரோர் சமயத்திலாவது பேசுகிறார்களே — சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, பாதுகாப்புச் சுவர்களையும் பக்குவமாக எழுப்பிக் கொண்டபிறகேனும் சிலகூற வாய் திறக்கிறார்களே — இவர்களைத் தம்பி, கடிந்துரைத்தால், இதனையும் கூறாது இருந்துவிடுவரே என்ற அச்சம் எனக்கு.

பேராசிரியர் சேது(ப்பிள்ளை) அவர்கள் செந்தமிழின் சுவையினை நாட்டு மக்களுக்கு விருந்தாக அளித்திடும் நல்லவர்! பொன்னாடை போர்த்தி அப்புலவரைப் பெருமைப்படுத்தினர். நான் அந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேனில்லை எனினும் இருக்குமிடத்திருந்தே அவர் பெற்ற ஏற்றம் கண்டு இறும்பூதெய்துபவன். அவர் அறியார் என்று எண்ணுகிறேன் அவரிடம் தொடர்பு கொண்ட குழாத்தினரில் கூட— அவர்பால் பெருமதிப்புக்கொண்ட என்போன்றார் அதிகம் இரார்.

பேராசிரியர் சேது(ப்பிள்ளை) அவர்கள், தமிழின் ஒலிமாட்சி குறித்து, அழகுறப் பேசியிருக்கிறார்.

தமிழ் மொழிக்கே அணியாக விளங்கிடும் 'ழ'கரம் 'ற'கரம் குறித்து எடுத்துக்கூறி; 'ழ' அளிக்கும் ஒலியின் இனிமையை எடுத்தியம்பி, இத்தகைய ஒலி மாட்சியை, பிறமொழிகள் பெற்றிராத ஒலிமாட்சியை, நந்தம் மக்கள், உணர்ந்து உவகைகொள்ளாதிருத்தல் குறித்தும், அதன் உயர்வறியாது அதனைப் பாழ்படுத்திடும் போக்கினைக் கண்டித்தும், பேசியுள்ளார்.

எழுந்திரு — ஏந்திரு என்றாகிவிட்டதையும்,

திருவிழா—திருவிஷா என்று கெடுவதையும்,

பழம்—பளம் ஆகிப் பாழ்படுவதையும்,

கிழவி, கியவி ஆகி 'ழ'கரம் கேலியாக்கப் படுவதையும், எடுத்துக்காட்டி, நமது தாய் மொழிக்கே அழகளிக்கும் 'ழ'கரம் இங்ஙனம் பாழ்படுத்தப் படுகிறதே, கொச்சை பேசி மொழியினைக் கொலை செய்கிறார்களே, என்றுகூறிக், கசிந்துருகி நிற்கிறார்.

'ற'கரம் மற்றோர் அணி! இதனையும் பாழ்படுத்துகின்றனர், உரையாடலில்!

'ற'கரம், வன்மையான உணர்ச்சியைக் காட்டிடும் ஒலிக்குறி! இதனை உணராமல், 'ற'வை, படாத பாடு படுத்துகிறார்கள் நம்மனோர். காற்று, காத்தாகிவிடுகிறது! நாற்று, நாத்தாகிறது! ஐயகோ! அம்மவோ! சிலம்பளித்த செல்வன்,

அறிவு அறைபோகிய
பொறி அறு நெஞ்சத்து
இறை முறை பிழைத்தேன்
வாயிலோயே!

என்று கண்ணகி கூறுவதாகச் செப்புகிறாரே. ஆறு றகரம் ஒலிக்

கிறது கேண்மின்—என்று எடுத்துக் காட்டுகிறார்.

மற்றும் பலகூறி, பேராசிரியர் மொழிவளம் பாழ்படுவது குறித்துக் கவலைப்படுகிறார்.

'ழ'கரம்—'ற'கரம் பாழ்படுகிறது!!

'ழ' தமிழ் மொழிக்கே தனிச் சிறப்பளிக்கும் அழகணி! இதனை அறியாதிருக்கும் தமிழர் தமிழழிப் போராகின்றனர்.

அவர்தம் போக்குக் கண்டு, மொழியின் சுவையினைப் பருகிடும் பேராசிரியர், கொதித்தெழுவதும், ஆகுமோ இந்தப் போக்கு எனக் கடாவுவதும் 'ழ'கரத்தின் அருமையினைக் கூறுவேன் கேண்மின், என்று அறைவதும் முறையே—குறை கூறுகின்றேனில்லை! அவர் ஆறு 'றகரம்' ஒலித்திடும் சிலப்பதிகார அடிகளை நினைவுபடுத்தும் போது, உண்மையிலேயே, அந்த 'ற'கரங்கள், தமிழ் மொழியின் ஒலி மாட்சியையும், பத்தினிப் பெண்ணின் உள்ளத்தை ஆட்சி செய்த வீர உணர்ச்சியையும் ஒருசேர எடுத்துக்காட்டத்தான் காண்கிறோம். மறுப்பாரில்லை! அத்தகைய மாண்புமிகு மொழிக்கு நாம் உடையோம் என்றெண்ணிப் பெருமிதம் கொள்ளாமலில்லை!

மங்கை நல்லாளிடம் காணும் ஒயிலும், மயிலிடம் காணும் சாயலும், மொழியிடம் காணப்பெறும் ஒலி அழகுக்கு ஈடாகாதுதான்! அந்த ஒலி அழகு, கொச்சை பேசுவதால், செத்தொழிகிறது என்பது கண்டு கண்ணீர் வடித்திடத் தக்கதோர் நிலைதான் ஐயமில்லை! ஆனால்...!

மொழியின் 'ஒலி' மட்டுமா இன்று பாழ்பட்டுக் கிடக்கிறது!

'ஒளி' மங்கி மறைந்துகொண்டிருக்கிறது!

ஒலிகெட்டும் ஒளிமங்கியும் இருத்தல் மட்டுமல்ல, மொழியே கீழ் நிலைக்கு, தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டுக் கிடக்கிறது.

பாவலரும் காவலரும் போற்றி வளர்த்த மொழி, அரசஅவையிலும் ஆடலரங்கிலும், புலவர் மன்றமதிலும் பூங்காவிலும், கடலின் மீதும் குன்றின் மீதும், களிறு ஏறுவோனும், காற்றை அடக்குவோனும், எங்கும் எவரும் பேசி மகிழ்ந்தமொழி, இன்று, எல்லாத் துறைகளிலும்; பேராசிரியர் பெருங் கவலை கொள்வதுபோல, ஒலிமாட்சி இழந்து மட்டுமல்ல, நிலைஇழந்து நிற்கிறது! கேட்பார் யார்? எங்குளர்? மொழியின் வளம் பேசிமகிழ்வோர் உளர்! ஒலி அழகுகாட்டி உவகை ஊட்டுவோர் உளர்! மொழியின் நிலை? அந்நிலைக்கு வந்துள்ளகேடு? அக்கேட்டினை மூட்டிடும் கெடுமதி கொண்டோர்! அவர்தம் அடிதொட்டு ஏற்றம்பெற எண்ணும் முதுகெலும்பற்றோர்! இவை குறித்து எடுத்தியம்ப யார் உளர்?

அவள் காற்சிலம்பு! கைவளை! அவள் மேனியில் இடம் கொண்டோம் என்பதால் கர்வம் கொண்டிருந்த கச்சு! அவள் கரம்பட்ட செம்பஞ்சுக் குழம்புக்கலயம்! அவள் தோகைமயிலெனச் சாய்ந்திருந்த மஞ்சம்!...என்று காட்டிக்காட்டி, பெருமூச்சுவிட்டு, கண்ணீரையும் சிந்தவிட்டு, அம்மங்கைநல்லாள் எங்கே? என்று கேட்பவனிடம், "அவளா? இமயத்தான் இழுத்துச் சென்றான்—என்னை எண்ணி எண்ணி அவள்சிந்தும் கண்ணீர் வெள்ளத்தில், அவன் ஓர்நாள் அமிழ்ந்தொழிந்து போவான்—உறுதி! உறுதி! உறுதி!—என்று கூறிப்பயன் என்ன? இருந்ததை இழந்தோம் என்பது கேவலம், இழந்திடுவோம் என்றநிலையை முன்கூட்டி அறிந்திடாதிருந்தது மடமை, அறிந்தபிறகு தடுத்திடும், முயற்சியில் ஈடுபடாதிருத்தல் கொடுமை, இழந்தபின் காதணி, காலணி, காட்டிக்கண்ணீர் சிந்துவது, இவையாவும் கூட்டிச் சேர்த்தசேறு அன்றோ!

மொழி இன்று தாக்கப்படுகிறது, சிறுகச்சிறுக அழிக்கப்பட்டு வருகிறது—அரச அவை அதனை ஏற்க மறுக்கிறது — அஞ்சல் நிலையத்தார் அதனை அடித்து விரட்டுகிறார்கள் — நாணயம் அதனைத் தாங்கிட மறுக்கிறது—நயாபைசா வருகிறது! இந்நிலையில், பழம் பளமானது பற்றியும், கிழவி கியவியானது பற்றியும், காற்றைக் காத்தாக்கி, நாற்றை நாத்தாக்கி விட்ட கொடுமை பற்றியும் எடுத்துப் பேசுவது, சாமான்யர்களுக்கே ஏற்றதாகாது என்றால், பேராசிரியர்களுக்கே இவ்வளவுதான் கூறமுடியும் என்று நாம் மன அமைதி கொள்ளமுடியும்! கேட்டால், இதனையும் கூறாது பேராசிரியர் சேது(ப்பிள்ளை) பெரும் பேராசிரியர் வையாபுரி(ப்பிள்ளை)யாக வடிவமெடுத்துவிடுவாரோ, என்றல்லவா அச்சம் பிறக்கிறது. எழுப்பிவிடாதே இவனும் வெளியே போய்விடப் போகிறான், என்று கூறின பிரன்சு அமைச்சன்போலல்லவா, ஏதோ, இதனையாவது பேசுகிறாரே, என்று எண்ணிக்கொள்ள வேண்டி இருக்கிறது. ஏனெனில் இது மிகப் பெரியவர்கள் மிகத் துணிவுடன் மிகப் பெரிய உண்மைகளை மிகச் சாமர்த்தியமாக மறைத்துவிடும் காலமாக இருக்கிறது! காலமாகவா? மிகப்பெரிய மனிதராவதற்கு, இஃதொன்றே யன்றோ, வழியாகவே அமைந்துவிட்டிருக்கிறது.

தம்பி! பணிக்கர் தெரியுமல்லவா, உனக்கு! சீனாவிலும், ஈஜிப்டிலும்,

## இரட்டிப்பு வேலை; செலவு!

தொழிலாளர் மந்திரியாக இருந்த வி. வி. கிரி ராஜினாமா செய்ய நேர்ந்ததை அனைவரும் அறிவர்! பாங்கிச் சிப்பந்திகளைப்பற்றி சர்க்கார் நியமித்த ஒரு குழுவின் தீர்ப்புகளை சர்க்கார் அமுல் நடத்த விரும்பாததை எதிர்த்து, அவர் விலகினார். அதற்குப் பிறகு, டில்லி, இன்னொரு குழுவை கஜேந்திர கட்கார் தலைமையில் நிறுவி, குறைகளை ஆலோசிக்கச்செய்தது. கிட்டத்தட்ட பழைய குழுவைப் போலவே, இதுவும் சிபார்சுகளைச் செய்துள்ளது! சிப்பந்திகளுக்குரிய சம்பளம் வழங்கவேண்டும் — 1954 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தங்கள் சிபார்சுகளை அமுல் செய்யவேண்டும் என்றெல்லாம், அக்குழு கூறியுள்ளது. இதனால், பாங்கிச் சிப்பந்திகள் ஓராண்டுக்குள்ள தங்கள் சம்பள உயர்வின் தொகையைப் பெறுகிற வாய்ப்பு உண்டாகியுள்ளது. இதுபோன்ற சிபார்சுகளையே பழைய குழு செய்தபோது, அமுல் நடத்த சாத்தியமில்லையென்று சொன்ன டில்லி, இப்போது, குழுவின் முடிவுகளை ஏற்றுக்கொண்டு அமுல் நடத்தப்போவதாகத் தெரிவித்துள்ளது. இத்தனைக்கும் புதிய குழுவின் முடிவுகளுக்கும் பழைய குழுவின் சிபார்சுகளுக்குமிடையே, அதிக வித்தியாசங்கள் இல்லை! இருந்தும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர்! கிரி விலகினார் — ஒரு வடநாட்டு தேசாய்க்கு மந்திரி சான்ஸ் கிடைத்தது. புதியகுழு ஒன்று போட்டு, வரிப்பணத்தில், கொஞ்சம் கரைந்திருக்கிறது. பலனோ, பழையமாதிரிதான்.

பணியாற்றிய பெரியவர். அவர் கூறுகிறார் துணிந்து, மொழி, பண்பாட்டுக்கு உயிர் என்கிறார்கள் மொழி மூலமாகத்தான் பண்பாடு உருவாகிறது வளருகிறது என்கிறார்கள், அது தவறு, பண்பாட்டினை எடுத்துக்கூறும் முறைகளில் மொழி ஒன்று, அவ்வளவுதான்! என்கிறார். கூறிவிட்டு, மொழிவழி அரசு கேட்பது தவறு, மிகப் பெருந்தவறு! என்று பேசுகிறார். அவர் சென்னையில் பல்வேறு இடங்களில் பேசியிருப்பதிலிருந்து, அவர் மொழிவழி அரசு கேட்கவில்லை என்பது மட்டுமல்ல, "எனக்கு என்ன வழி?" என்று நேருபண்டிதரைக் கேட்கிறார் என்பதும் நன்றாகத் தெரிகிறது.

மொழிக்கும் பண்பாட்டுக்கும் தொடர்பு இல்லை, என்று துணிவுடன் கூறுகிறார் பணிக்கர்!

பண்பாடு, பாரதத்தில் இருக்கிறது, இராமாயணத்தில் இருக்கிறது. வங்க மொழிமூலம் ஓர் பண்பாடு, மராத்திமூலம் மற்றோர் பண்பாடு, தமிழ்மூலம் தனியானதோர் பண்பாடு ஏற்பட்டுத் தழைத்திருக்கிறது என்று கூறுவது தவறு என்கிறார், மொழி குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கக்கூடிய ஓய்வோ வாய்ப்போ பெற முடியாத அளவுக்கு, உலகு எங்கணும்ஓடோடிச் சென்று; உபசாரமொழிகளைச் சொரிந்து உச்சி ஏறி நிற்கும் தலைவர்களுடன் உறவாடிடும் பணியாற்றிக்கொண்டிருந்த பணிக்கர், "தொல்காப்பியம் என்றோர் ஏடு உண்டு ஐயா! அது எமது தொன்மையான பண்பாட்டினை உருவாக்கிய கருவூலம்" என்று கூறினால், அவர் 'ஒரு சர்வதேச ரீதியான' புன்னகையை வருவித்துக்கொண்டு, இதெல்லாம் பழைய கஞ்சி — என்று கூறிவிடுகிறார்! மொழியின் தொன்மை, மென்மை, வளம், இவைகள் இடது கரத்தால் ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியன என்கிறார், வலக்கரம் கொண்டோ, இராமாயண பாரதச் சேற்றிலே அமிழ்ந்து கிடக்கும் செந்தாமரை இதழ்களைப் பொறுக்கி எடுக்கும் பணியிலே ஈடுபடுகிறார். பெரியவர்! எனவே பெருந் துணிவுடன் இவ்வண்ணம் பேசுகிறார்! பேராசிரியர்களோ, 'ழ'கரம் பாழ்பட்டுவிட்டதே, 'ற'கரம் 'ட'கரமாகிவிட்டதே என்ற கவலையில் தங்களை மறைத்துக் கொள்கிறார்கள்!

இமயம் முதல் குமரிவரை, பணிக்கர், இராமனையும் கிருஷ்ணனையும் பார்க்கிறாராம், 'பாரதம்' முழுவதும் பகவத்கீதை இருக்கிறதாம், எனவே, மொழிகளைக் கடந்து ஓர் பண்பாடு இருந்திடுவது புலனாகிறதாம்!

எப்படி, வாதம்? வாதத்தின் திறத்தை அல்ல தம்பி, நான் கவனிக்கச் சொல்வது, அந்தத் துணிவைக் கவனித்தாயா!! இராமனும் கிருஷ்ணனும், இமயம்முதல் குமரிவரை இருக்கிறார்கள் — எனவே மொழிவழி அரசு கேட்பதோ, மொழிவழி பண்பாடுகள் அமைகின்றன என்று கொள்வதோ கூடாது என்று வாதாடுகிறார்— இந்தத் துணிவு, எவரிடம் காட்டப்படுகிறது என்று கவனித்தாயா தம்பி! இங்கு, திரு இடத்தில்! திரு இடத்தில் மட்டுந்தான்!

லிஸ்பனிலிருந்து லெனின் கிராட் வரையில், இலண்டனிலிருந்து ஜிப்ரால்டர் வரையில், ஆட்டவாவிலிருந்து அடிலெய்ட்வரையில், என்று இப்படிகுறுக்கும் நெடுக்குமாகப்பலகோடுகள் கிறிக்காட்டி, நீயும்நானும் கூறமுடியும். இங்கெல்லாம் ஏசுநாதர் தெரியும்! பைபிள் படிக்கப்படுகிறது! எனினும் இங்கெல்லாம் ஏசுவும் மேரிஅன்னையும் தெரிவதால், பைபிள் இங்கெல்லாம் புனித ஏடாக இருப்பதால், ஒரே பண்பாடுதான் இருக்கிறது என்று அறிக, எனவே ஒரேஅரசு அமைதலே பொருந்தும் என்று உணர்க என்று, கூறிடவும், அமெரிக்கா, கானடா, மெச்சிகோ பிரேசில், அர்ஜெண்டினா, இங்கிலாந்து, டென்மார்க், நார்வேஸ்வீடன், ஸ்பெயின் பிரான்சு, ஜெர்மனி இத்தாலி, என்றெல்லாம் தனித்தனி அரசுகளாக இருத்தல் ஆகாது, ஒரேபண்பாடு ஒரே அரசு என்று பணிக்கர் அங்கு எங்கும் பேசத் துணிவு கொள்ளமாட்டார். இங்குதான், எதையும் பேச எவரையும் அனுமதித்துவிடுகிறோமே. பேசுகிறார்!

ஜாதி—வர்ணாஸ்ரமம்— சுவர்க்கம் —இவைபோன்ற முறைகளே எமக்கு உரியன அல்ல, எனவே தான் எமது மொழியில் அச்சொற்களே இல்லை, என்று புலவர் பெருமக்கள் கூறுகின்றனர்.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வாணிபம் எமது முறையல்ல. எமது இலக்கியம் காண்போர் இதனினை அறிவர் என்று புலவர் பெருமக்கள் பேசுகின்றனர்.

எமது நிலமே, ஐந்தாகத் தரப்படுத்தப்பட்டிருக்கிறது.

எம்மிடம் திணைஒழுக்கம் உண்டு.

எமது ஆட்சிமுறை, போர்முறை யாவுமே தனியான பண்பாடு விளக்கமளித்திடும்.

இவ்விதமெல்லாம் பேசுகின்றனர்—முத்தமிழ் என்று யாம் இயல், இசை, நாடகம் என்று கூறும் நிலை, பிற மொழியாளருக்கு இல்லை என்று கூறிப் பெருமிதம் கொள்கின்றனர்.

எமக்கென ஓர் மொழி, அம்மொழிவழி எமக்கென்றோர் பண்பாடு, அப்பண்பாட்டுக்கு உறைவிடமாகவும், அதற்கு ஊறு நேரிடா வண்ணம் பாதுகாப்பளிப்ப

## விடுதலைத் தாகம்

—:—

**சூடான்**

**எகிப்துடன் சேர்ந்திருப்பதா, தனியாக இருப்பதா என்பதுபற்றி பொதுமக்கள் வாக்கெடுக்க பார்லிமெண்டு, முடிவு எடுத்திருக்கிறது.**

**மலேயா**

**பிரிட்டிஷ் பிடியிலிருந்து விலகி சுயாட்சி வேண்டுமென்று புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சபை தீர்மானம் செய்திருக்கிறது.**

**மொராக்கோ**

**பிரெஞ்சுப் பிடியிலிருந்து விலக, 1600 பேர் பலியாகிய பின், பிரெஞ்சு சர்க்கார் மிரண்டு போய் 'சமரசம்' காண முன்வந்துள்ளது.**

**டுனீஷியா**

**பிரெஞ்சு ஆதிக்கம் விடுதலை அளிக்க தயாராகி வருவதாகச் செய்தி கூறுகிறது.**

**அல்ஜீரியா**

**பிரெஞ்சுப் பிடியிலிருந்து விலக போர்முழக்கம் செய்துகொண்டிருக்கிறது.**

**நாகநாடு**

**இந்திய உபகண்டத்திலுள்ள, நாகர்கள் மீண்டும் மீண்டும் விடுதலைக் கிளர்ச்சியிலீடுபடுவதால், நேரு சென்று, 'பிரசங்கமாரி' செய்து திரும்பியுள்ளார்.**

*தாகவுமுள்ள ஓர் அரசு—இவற்றினுக்கெல்லாம் எம்மிடம் சான்றுகள் உள்ளன என்று சாற்றுகின்றனர். எனினும் இவர்தம் சான்றுகளைச் சருகு என்கிறார், சேற்றிலே சந்தன மணம் கமழ்கிறது என்கிறார், துணிந்து பணிக்கர்.*

அறிவு அறை போகிய பொறி அறு நெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே!

*என்பதில் காணக்கிடக்கும் 'ற'கரத்தின் பெருமையில் பேராசிரியர் நீந்திக் களித்திடுகிறார்—இன்று இறைமுறை பிழைத்தோன் வாயிலோனாக உள்ள பணிக்கர்கள் கண்ணீர் பொழிந்திடும் கண்ணகிகளை "வழக்காடவும் துணிந்தனையோ! அவன் தலை வெட்டுண்டதுபோல உன் நாவும் வெட்டுப்பட வேண்டியோ, எமது கொற்றத்தினைக் குறைபேசி நிற்கிறாய்" என்று கேட்கின்றனர். நமது பேராசிரியர்கள் அந்த வாயிலோன் எது செய்யினும் பரவாயில்லை, 'ழ'கரம் பாழ்படாது இருக்கிறதா என்று கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.*

*லோக்சபா—ராஜப்பிரமுக்—ராஷ்டிரபதி—நயாபைசா! இவ்வண்ணம் படைஎடுக்கின்றன, வழக்கில் நடமாட வேண்டியசொற்கள்! 'ழ'வும் 'ற'வும் மட்டுமா, மொழியே பிழைப்பது கடினம் என்று நிலைபிறந்திருக்கிறது. கேட்கும் உரிமை உணர்ச்சி, அதற்கான உள்ளஉரம் எழக்காணோம்! இரயில்வே நிலையங்களில் இந்தி, அஞ்சல் அட்டைகளில் இந்தி நாணயங்களில் இந்தி, அலுவலகங்களின் பெயர் பொறிப்பலகைகளில் இந்தி, பட்டாளத்தில் இந்தி—என்று எங்கும் இந்தி நுழைக்கப்படுகிறது! ஆட்சிமன்றங்களிலிருந்து அங்காடிவரையில் இந்தி அரசோச்சக் கிளம்பிவிட்டது. கேட்பார் இல்லை!*

தமிழ் இலக்கியம் எதையும் சார்ந்திருப்பதன்று. கலாச்சார உபயோகத்தில் அது தனித்து இயங்க வல்லது.

இந்திய இலக்கியங்கள்பற்றி தென் இந்தியாவிலிருந்தே அதுவும் திராவிடர்கள் மூலம் முக்கியமாகத் தமிழ், மலையாளம் பேசும் மக்கள் மூலம்தான் ஐரோப்பாவில் அறிய முடிந்தது.

**17**-வது **18**-வது நூற்றாண்டில், தமிழ் சமஸ்கிருதத்தைவிட அதிகம் முன்னேறி இருந்தது.

தமிழ் மொழி தவிர மற்ற மொழிகளெல்லாம் சமஸ்கிருதக் கலப்புடையன."

பிலியோஜாத் *எனும் பிரஞ்சு நாட்டு, மொழித்துறை ஆராய்ச்சியாளர் கூறுகிறார். நாள்பத்து ஆகவில்லை இங்ஙனம் இவர் சென்னையில் கல்லூரியில் நடைபெற்ற, தமிழ்கலைக் கழகக் கூட்டமொன்றில் பேசி! பேராசிரியர் சேது(ப்பிள்ளை) அவர்களும் அந்த மன்றத்தில் அமர்ந்திருந்தார் என்று தெரிகிறது. எனினும், என்ன பயன்? ஏற்புடையது! ஈடில்லாதது! தனியாக இயங்கவல்லது! பண்பின் பெட்டகம்! இன்ப ஊற்று! என்றெல்லாம் கூறித்தான் என்ன பயன்! இந்தி இழிவுபடுத்துகிறது—அதனை இழிவென்று எண்ணாதிர், என்னைப் பாரும், என் சொல்லைக் கேளும், அடுத்த உத்தியோகம் கிடைக்கும் வரை நான் இப்படி 'அடப்பம்' தாங்கும் பணி புரிபவன் அறிமின்! என்று கூறி வருகிறார் பணிக்கர்.*

*பணிக்கர்கள் இதுபோலப் பேசுவது கேட்டும், பாரத அரசில் பணியாரத்துண்டுகள் பெறுவதற்காகப் பல்லிளித்துக் கிடப்போர், மொழி, பண்பாடு, அரசு எனும் எதனை விட்டுக் கொடுத்தேனும், நத்திப் பிழைத்திடும் போக்கிலே செல்வதைக் காணும்போதும், மிகுதியும் துக்கம் துளைத்திடுகிறது. அந்த வேளையில், ஓரோர் இடத்திலிருந்து உள்ளத்திலுள்ளதை ஒரு சிலர் துணிந்து கூற முன்வருவது காண்பது, பாலைவனத்திலே கிடைக்கும் நீரோடை போலாகிறது. மகிழ்ச்சி இனிப்பூட்டுகிறது. இதோ மற்றோர் தமிழாசிரியர்; 'ழ'கர 'ற'கரத்தோடு நிற்பவரல்ல, நம்மோடு நெடுந்தூரம் வருபவருமல்ல, எனினும், நாம் செல்லும் திசையைச் சுட்டிக்காட்டிடும் அளவுக்கு முன்னணி வருகிறார், டாக்டர் இராசமாணிக்கனார், மதுரை தியாகராசர் கல்லூரியில் உள்ளவர்.*

"இந்திய" வரலாற்றுக்காலம் தோன்றிய நாள்தொட்டு, வெள்ளையர் ஆட்சி ஏற்படும் வரையில் தமிழகம், இந்தியாவை ஆண்ட எந்தப் பேரரசாலும் ஆளப்படவில்லை என்பது கவனிக்கத் தக்கது. இந்தியாவின் பெரும் பகுதியை ஒரு குடைக்கீழ்வைத்தாண்ட அசோகன் காலத்திலும் தமிழகம் தனியாட்சி புரிந்தது என்பதை அப்பேரரசன் வெளியிட்ட கல்வெட்டுகளே தெரிவிக்கின்றன. இங்ஙனம் பல நூற்றாண்டுகளாகத் தனிப்பட்டு இருந்த தமிழகம் தனக்கென ஒரு மொழியையும் அதற்குரிய இலக்கியங்களையும் தனிப்பட்ட பண்பாட்டையும் வளர்த்து வந்தது."

*தமிழாசிரியர்கள் அனைவரும் இத்தகைய வரலாற்று உண்மைகளை எடுத்துக்கூறும் உள்ளத்திண்மை பெற்றுவிட்டால், மொழி ஆராய்ச்சித் துறையிலே அல்ல, ஆட்சியாளர்களுக்கு நேசத் தொடர்புகளை ஏற்படுத்தித் தரும்*

## பபூனல்ல!

—o—

டில்லி பார்லிமெண்டுத் தலைவர் மவ்லங்கர் இருக்கிறாரே, அவர் வாயிலிருந்து எப்போதாவது உதிரும் வார்த்தைகளைக் கேட்கும்போது அழுவதா! சிரிப்பதா! என்ற சந்தேகமே வருகிறது, நமக்கு. இந்திய உபகண்டத்தில் ஜனநாயகம் செவ்வனே அமுல் நடத்தும்படியான பதவியில் அமர்ந்திருக்கும் பேறுபெற்ற அவர், முன் போர்முறை சொன்னார்—"நான் பத்திரிகைகள் படிக்கும் பழக்கத்தையே நிறுத்திவிட்டேன். என்ன இருக்கிறது பத்திரிக்கைகளில்?" என்று. இத்த வாரம், இன்னொரு, மணிமொழி சிந்தியுள்ளார்! மத்தியான உணவுக்குக்கூட உறுப்பினர்களைப் போக விடாமல், பார்லிமெண்டு நடைபெறுகிறதாம். பசிவந்திடப் பத்தும் பறந்து போகுமே! பார்லிமெண்டு உறுப்பினர்கள் மட்டும் விதிவிலக்கா?—அதனால், அவரவர்கள் 'உணவுப் பிரச்னையைத் தீர்க்கப் போய்விடுவதால், 'கோரம்' இல்லாமல் சபை கோரமாக இருக்கிறதாம்! இதை குறிப்பிட்டு எச்.வி. காமத் கேட்டாராம், சாப்பாட்டு வேளையிலும் சபை ஏன் கூடவேண்டும். அதனால்தானே, உறுப்பினர்கள், இருக்க முடியவில்லை. இந்த நேரத்தை மாற்றி வைத்துக்கொள்ளக் கூடாதா? என்று. இதற்கு என்ன பதில் சொன்னார் தெரியுமா; மாவ்லங்கர்—"அப்படி செய்ய முடியாது. அதற்குப் பதில் சபையில் 'கோரம்' இல்லாவிட்டாலும் சபைக் காரியங்களை நடத்தலாம் — என்று ஒரு சட்டம் கொண்டுவரலாம்," என்றாராம். இப்படிச் செய்யுமாறு சர்க்காரையும் வற்புறுத்தினாராம்!

குல்லாய்க்குத் தக்கபடி தலையை வெட்டிக்கொண்டானாம், ஒருவன்—கதையில்! அவனையும் மிஞ்சுகிறார், மாவ்லங்கர்—காலி நாற்காலிகளே போதும், சபையை நடாத்த என்கிறார்! வேடிக்கையான ஆசாமி-மிகப் பொறுப்பான இடத்தில்.

துறையிலே பணியாற்றும் பணிக்கர் இவ்வளவு பதட்டமாகவா பேசிடுவார்!

ஏன், தமிழறிந்தோர் துணிவு பெறுதுள்ளனர்.

டாக்டர், அந்த நோயின் தன்மையையும் விளக்குகிறார்.

**"தமிழன்—தமிழனாக வாழ்தல் வேண்டும். அவன் தன் தாய் மொழியின் சிறப்பை அறிதல் வேண்டும்; தமிழிலேயே தனக்குரிய சடங்குகளைச் செய்து கொள்ள வேண்டும் என்று தமிழில் வல்ல சான்றோர் கூறினால், இவர்கள் நாத்தீகர்கள்-வடமொழியை வெறுப்பவர்-ஒருமைப்பட்டுள்ள சமுதாயத்தில் வேற்றுமையை உண்டாக்குகின்றனர் என்று ஒரு சாரார் பழிதூற்றுகின்றனர். இவர்களுக்குள்ள நாளிதழ்களின் செல்வாக்காலும், உயர் அலுவலரது மறைமுகமான செல்வாக்காலும் இச்சான்றோர்—பலவாறு அழுத்தப்படுகின்றனர். தமிழருள்ளே அறிவற்ற புல்லுருவிகளை ஏவிவிட்டுத் தூற்றவும் செய்கின்றனர்"**

இந்த அச்சம்தான் பலரை 'ழ'கர 'ற'கரத்தோடு நிறுத்திவிடுகிறது.

புல்லுருவிகள்! பொன்னுருவிகள்! கண் சிமிட்டிகள்! காசு வீசுவோர்!—அந்தப் படைவரிசையில் உள்ளவர்கள் பல வகையினர். ஒன்றால் வீழ்த்த முடியாவிட்டால், மற்றொன்றால்! அடிக்கும் கரத்தால் ஆகாததை அணைக்கும் கரம் சாதித்துத் தருகிறது. பலத்தால் முடியாததை பாவத்தால், பரதத்தால், சாதித்துக்கொள்ள முடிகிறது! எல்லாவற்றையும்விட 'பழி' தாக்கிடும் என்ற பயமே, பலரை வீழ்த்திடப் பயன்படுகிறது.

படித்திருப்பாயே தம்பி, பம்பாயில் பத்துநாளைக்கு முன்பு, ஒரு புனித விழாவன்று கடல் நீர் இனிக்கிறது என்று ஒரு புரளி கட்டிவிடப்பட்டதாமே, அந்தச் செய்தியை. எவனோ ஒரு எத்தன், தனக்குக் கிடைத்த ஏமாளியிடம் கூறி வைத்திருக்கிறான் கடல் நீர் இன்றுமட்டும் இனிக்கும் என்று. அவ்வளவுதான், சாரை சாரையாக மக்கள் கடலை நோக்கிச் சென்று, நான் முந்தி நீ முந்தி என்று விழுந்தடித்துக்கொண்டு சென்று, கடல் நீர் பருகினராம்.

கடல்நீர் கரித்தது! முகம் சுளித்தது! குமட்டலும் வந்தது! எனினும் என் செய்வர்! கடல் நீர் இனிக்கும் என்றல்லவா கூறி இருக்கிறார்கள். எனவே கடல் நீர் கரிக்கிறது, இனிக்கவில்லை என்று கூறினால், பாபாத்மாவுக்கு அப்படித்தான்! புண்யாத்துமாவுக்குத்தான் இனிக்கும் என்று கூறிவிடுவரே, என்று எண்ணி, ஏதும் கூறாமலே இருந்துவிட்டனர்—பெரும்பாலோர்! துணிந்து சிலர் கூறினர், கடல் நீர் எப்போதும் போல கரிக்கத்தான் செய்கிறது; இனிக்கும் என்று சொன்னது வெறும் புரளி என்று! ஆம்!—என்றுகூட பக்தர்கள் கூறவில்லையாம்—முகம் 'ஆம்' என்றதாம்!

அதுபோலத்தான் தம்பி, தேசத்துரோகி—நாட்டைக் காட்டிக்கொடுப்பவன்—சமுதாயத்தில் பிளவு மூட்டுபவன்—என்ற பழி சுமத்துவரே என்று அஞ்சி, 'ழ'கர 'ற'கரத்தோடு நின்றுவிடுகிறார்கள்.

இந்தியப்பேரரசு, இந்திதேசிய மொழி; என்பவைகளை மறுப்பது ஆபத்தாகமுடியும் என்று அஞ்சிக்கிடப்பதும், 'ழ'கரத்தையும் 'ற'கரத்தையும்காத்திட நம்மாலானமுயற்சி செய்வோம் என்று முனைவதும், பலனளிக்காது. வேரிலே கொதி நீர் ஊற்றும் காதகர்கள் இருக்கும்போது, இதழின் அழகுபற்றிப்பேசி மகிழ்வது பலன்தராது! 'ழ', 'ற', மட்டுமல்ல. தமிழ்மொழிக்கு, தமிழ்ப் பண்பாட்டுக்கு, தமிழகத்துக்கு ஆபத்து என்பதை அஞ்சாது எடுத்துரைக்க முன்வருதல் வேண்டும்.

தம்பி! பேராசிரியர்கள், 'ழ'கர 'ற'கரத்தோடு நின்றுவிட்டாலும், நீயும் நானும், நம்போன்ற சாமான்யர்களும், கடல்நீர் கரிக்கிறது-பணிக்கர்பேச்சு புளிக்கிறது— டில்லிகொட்டுகிறது—என்ற உண்மைகளை எடுத்துரைப்போம். பேராசிரியர்களின் பெரும்புலமை நாட்டுக்குப் பலனளிக்கத் தவறிவிட்டாலும், நாம் நமது தூய தொண்டு மூலம், நாட்டு விடுதலைக்கான 'சூழ்நிலை'யை உருவாக்க வல்லோம்—அதிலே எனக்குள்ள உறுதி, நான் நாட்டுமக்களின் நல்லார்வத்தைக் காணுந்தோறும் காணுந்தோறும், வளர்கிறது, மிளிர்கிறது!!

அன்பன்,

**அண்ணாத்துரை.**

## கூடா நட்பு

"ஏன்?" என்று கேட்கிறார், டில்லியிலிருக்கும் 'மெயில்' நிருபர்! எப்போது பார்த்தாலும், டில்லி மந்திரி சபையில் நெருக்கடி — டி. டி. கே. விலகிவிட்டார்—அடிப்படைக் கொள்கையில் தகராறு—தேஷ்முக் ராஜினமா செய்ய நேரும்—இப்படி செய்திகள் வருவானேன், என்று கேட்கிறார்! அப்படிக் கேட்டுவிட்டு, முக்கியமான மந்திரிகளாயிருப்பவர்கள் நாட்டின் பொருளாதாரத்தில் 'புரட்சி' கூடாது என்கிறார்கள்—காங்கிரஸ் சோஷலிச சமுதாயம் என்று சொல்லி, ஏதேதோ செய்ய ஆசைப்படுகிறது. அதனால்தான், இப்படி கருத்து வேற்றுமைகள் உண்டாகிறதோ?—என்றும், குறிப்பிடுகிறார். உண்மைதான்! புள்ளிமான்—புலி—இரண்டும் ஒரே இடத்திலிருந்துகொண்டு உற்சாகமாக உலவ வேண்டும் என்று எதிர்பார்ப்பது, 'பண்டிதரின்பாஷை'யில் சொல்ல வேண்டுமானால், முட்டாள்தனம்' ஆகும்! கம்பெனி முதலாளி, பாங்கி அதிபதிகளின் பங்காளி, இடையிலே அரசியல் பேசும் அதிதீவிரவாதம் — என்ன பலன் கிடைக்கும் இந்தக் கூட்டுறவால்? இதனைத்தான் ஏழெட்டு ஆண்டுகளாக நாம் குறிப்பிட்டு வருகிறோம்! காங்கிரஸ், முதலாளிகளையும் திருப்திப்படுத்த விரும்புகிறது; மக்களையும் கவர்சிக்க விரும்புகிறது— அதனால், அவர்களின் சகாககளின் சிலரை மந்திரியாக்குகிறது. தவளை கீழே இழுக்கிறது—பருந்து மேலே பறக்கிறது! மந்திரி சபை எனும் 'கயிறு' தத்தளிக்கிறது! கூடாத நட்பு—என்ன செய்வது—சொன்னபோது எவ்வளவு கோபம் வந்தது தேசியத் தாருக்கு.

செப்டம்பர் 17-ல்,
தி. மு. க. பிறந்த நாளில் பிறக்கிறது...
**"காவியம்"**
(கவிதை வார இதழ்)
ஆசிரியர்: சுரதா
முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.
விவரங்கட்கு:—
நிர்வாகி, காவியம்,
(A) சென்னை-12



கிராம்வெல்.

# மக்கள் கரமும் மன்னன் சிரமும்



சார்லஸ்

**சி.என்.அண்ணாதுரை.**

**சார்லஸ்** மன்னன், முரட்டுத் தோற்றமும், பொறி பறக்கும் பேச்சினனுமல்ல, பார்ப்பதற்குப் பரமசாதுவாக இருப்பவன்—கனிவு வழியப் பார்ப்பான். கண்ணியமாகப் பழகுவான். எனவே, அவனைக் கண்ட மக்கள் தோற்றத்தையும் செயலையும் ஒப்பிட்டுப் பார்த்துத் திகைத்திருப்பர். இவ்வளவு நல்லவனாக இருக்கிறான், எத்துணை தீய காரியம் செய்தான்! என்று எண்ணியிருப்பர்.

ஐந்து திங்கள் இந்த மாளிகையில் அரசன், மாமன்றத்தின் கைதியாக இருந்தான். எந்த மாமன்றத்துக்குள்ளே நுழைந்து ஐவரைக்கைதுசெய்ய வந்திருக்கிறேன் என்று அதிகாரம் பேசினானோ, அதே மன்னன், அதே மாமன்றத்தின் கைதியானான். வரலாறு இதுபோன்ற சம்பவத்தை அடிக்கடியாகப் பொறித்திட முடியும்!

மன்னனிடம், சமரசம் காணவேண்டும் என்ற நோக்கமே மாமன்றத்துக்கு இருந்தது—ஆனால் காட்டு மிருகத்தை வீட்டில் கொண்டுவந்து பழக்கினாலும், அதன் காட்டுக் குணம் போவதில்லை என்பதுபோல, மன்னன், மாமன்றம் காட்டிய நட்புமூலம், தன் தீய எண்ணத்தை விட்டுவிடவில்லை.

அண்டை அயலில் இருந்த பிரபுக்களின் மாளிகைக்கு மன்னன் செல்லலாம், விருந்து உண்டு மகிழலாம், வேட்டை ஆடிக் களிக்கலாம், தடை ஏதும் இல்லை. ஆனால் இது எதற்குப் பயன்பட்டது? ஒற்றர்களிடம் பேசி, ஓட வழிதேடுவதற்குத்தான்!

மீன்பிடித்துக் கொண்டிருந்தான் ஒருவன். மன்னன் உலவச் சென்றான். மீன்பிடித்தவன், மெள்ள மெள்ள மன்னனை அணுகி, இரகசியமாக ஒரு சுருளைத் தருகிறான். பிரான்சிலிருந்து, எனிரிடா அனுப்பிய கடிதம் அது.

இப்படிப்பட்ட சம்பவம் கண்டபிறகே, மாமன்றம், கண்காணிப்புத் தேவை என்ற முடிவுக்கு வந்தது. மன்னனுக்கு ஊழியம் செய்பவர்கள், ஒற்றர்கள் என்பதறிந்து, அவர்களை நீக்கிவிட்டு; மாமன்றம் வேறு ஆட்களை அமர்த்திற்று.

மன்னன் இவ்விதம்! மாமன்றமோ, பிளவுக்கு இடமளித்துவிட்டது. நீண்ட காலமாக ஓயாது உழைத்து வந்தவர்களுக்கிடையே, கருத்து வேற்றுமை, பல பிரச்னைகளில், முளைத்தன. எதிர்கால ஏற்பாடு பற்றி, முரண்பாடான எண்ணங்கள் உலவின. கேட்டது கிடைத்துவிட்டது என்ற திருப்தி சிலருக்கு; கேடு களையப்படவில்லை என்ற எண்ணம் சிலருக்கு; அரசன் மீண்டும் அரண்மனை புகவேண்டும் என்று எண்ணியவர்களுக்கு, அருமையான வாய்ப்பாகி விட்டது, இந்தக் கருத்து வேற்றுமை.

மாமன்றத்திலிருந்து மணி விளக்குகள் அணைந்துவிட்டதுபோல, பிம், ஹாம்டன் மறைந்துவிட்டனர்.

களம் புகுந்து கடும் போரிட்டோருக்கும், கருத்துப் போரில் காலமெல்லாம் செலவிட்டு, மக்களைப் போர் வீரராக்கியோருக்கும் இடையே மனக்கசப்பு வளர்ந்தது.

மாமன்றம் அரசாளவிழைந்தது, படையினர், எமது கரம் வலுவுடையது என்று வாதாடினர்.

கிராம்வெல், இதுபோது, கீர்த்திமிக்க நிலைபெற்று, மாமன்றத்தை மங்கவைக்கும் மாவீரனானான்.

கனி கிடைத்துவிட்டது, சாறு பிழிந்து பருகுவதா துண்டுகளாக்கித் தின்பதா என்பதுபோல, வெற்றி கிடைத்துவிட்டது, இனி அதனைப் பயன்படுத்துவது எம்முறையில், என்பதுபற்றிக்கருத்து வேற்றுமை முளைத்தது.

அந்த நேரத்தில், குழப்பத்தைத் தவிர்க்கவும், சதிகளைச் சாய்க்கவும், வெளிநாட்டினர் விபரீதப் போக்கு ஏதும் கொள்ளாமலிருக்கச்செய்யவும், மீண்டும் மன்னன் சார்பிலே எத்தகைய இரத்தக்களறியும் ஏற்படாது தடுக்கவும், கிராம்வெல்லுக்குத்தான் ஆற்றலும் வாய்ப்பும் இருந்தது.

கிராமத்துக் கனவான், கடும் உழைப்பால் உயர்ந்தவன், படையினருக்கு நண்பன், தூய நடத்தையாளன், கிராம்வெல். அவன் களத்திலே காட்டிய வீரமும், படைவரிசைகளிலே புகுத்திய புது முறைகளும், தன்னல மறுப்பாளர்களைத் திரட்டிய நேர்த்தியும், தலைமை இடத்துக்கு அவனைத் தகுதியுள்ளவனாக்கிற்று.

சார்லசுக்குத் தீர்ப்பளிக்கும் பொறுப்பை ஏற்க கிராம்வெலே தகுதி வாய்ந்தவன்—மற்றோர் காரணத்தால்.

சார்லஸ், ஆண்டவன் எனக்கு அருள்பாலித்திருக்கிறார், அதனாலேயே நான் மன்னனானேன்—என்று தத்துவம் பேசினான்.

கிராம்வெல், தான்பெற்ற வெற்றிகள் அனைத்தும், ஆண்டவன் அருளாலே கிடைத்தன என்று நம்பிக் கூறி வந்தவன்.

"அவன் விட்ட வழிப்படி நடக்கட்டும்!" என்பது, இருவருக்கும் எப்போதும் எண்ணம்.

'வெற்றி தருபவன் அவனே! வேந்தனை நம்மிடம் ஒப்படைத்தவனும் அவனே!' என்று பக்தி மேலிட்டுத்தான் கிராம்வெல் பேசுவான். களத்திலிருந்து அவன், வெற்றிச் செய்திகளை அனுப்பிய ஓலைகள் முதற்கொண்டு துணைவிக்கு அனுப்பிய காதல் கடிதம் வரையில், இந்த "பக்தி" ததும்பிற்று.

சார்லசும், எந்தக் கஷ்டம் நேரிடுகிறபோதும், எந்தக்

கொடுமை செய்கிற சமயத்திலும், ''அவன்'' பெயர் கூறத் தவறியதில்லை.

எனவே, ''அவன்'' அருள் பெற்ற அவ்விருவரும் தான், ஒருவருக்கொருவர் கணக்குத் தீர்த்துக்கொள்ள வேண்டியது, பொருத்தம்!

பொருத்தம் இருப்பினும் இல்லாது போயினும் நிலைமை, கிராம்வெல் பக்கம் இருந்தது.

மாமன்றத்தில், முணுமுணுத்தவர்களை, விரட்டினன்-முன்னின்று காரியமாற்றும் நிலை பெற்றான்.

மாமன்றத்துக்கும் படையினருக்கும், ஏற்பட்ட இந்தப் பிளவு, மன்னனுக்கு வாய்ப்பாகிவிடாமலிருக்க, இரு சாராரும், தனித்தனியே, மன்னனிடம் சமரசம் செய்து கொள்ள முயற்சித்தனர். மன்னனோ, 'இதைக் காட்டி அதை' ஏய்க்கும் போக்கில் ஈடுபட்டான்.

படையினர், மன்னனைத் தங்கள் வசம் கொண்டு வந்து வைத்துக்கொள்வதுதான் நலன் பயக்கும் என்றனர்; எனவே மாமன்றத்தாரிடம் சிறைப்பட்டிருந்த மன்னனைத் தங்கள் மேற்பார்வையில் உள்ள சிறைக்குக் கொண்டுவரத் திட்டம் தயாராயிற்று. மன்னன் இப்போது, சிறை எடுக்கப்பட வேண்டிய பொருளானான்!

ஜாயிஸ் என்றோர் படைவீரன் — சிறு பிரிவுக்குத் தலைவன். மன்னன் இருக்கும் மாளிகையைச் சுற்றி வளைத்துக்கொண்டான். மாமன்றச் சார்பிலே காவலிருந்தவர்களின் கரம் ஒடுங்கிவிட்டது. கரத்தில் துப்பாக்கியுடன், சென்றான், மன்னனிடம்.

''புறப்படுக!''

''எங்கே?''

''இந்த இடத்தைவிட்டு''

''யார் நீ?''

''ஜாயிஸ்! படைவீரன்!''

''யார் உத்தரவுமீது வந்தாய்?''

''நானேதான்!''

''எங்கே உத்தரவு''

''உத்தரவைக் காட்டத்தான் வேண்டுமா! சரி, அதோ பாரும், உத்தரவு''

வெளியே நிற்கும் சிறு படையைக் கண்டான் மன்னன், சீறிப் பயனில்லை, ஜாயிசுடன் கிளம்பினன்.

ஜாயிஸ், இங்ஙனம், மன்னனை முரட்டுத்தனமாக அழைத்துச் செல்ல முற்பட்டாலும், மன்னன் உடன்வர இணங்கிய பிறகு, மரியாதையாக நடந்துகொள்ளலானன். மன்னனுடைய விருப்பப்படியே, நியூமார்க்கட் எனும் இடம் நோக்கிச் சென்றனர். அங்கு போய்ச் சேருமுன், ஓர் இரவு, வழியில் உள்ள கிராமத்தில், ஓர் மாளிகையில் தங்கினர். அந்த மாளிகை முன்னம் கிராம்வெலுக்குச் சொந்தமாக இருந்தது!

பேர்பாக்ஸ், கிராம்வெல், ஆகியோர், மன்னனை மரியாதையாகவே நடத்தினர் — அவன் விருப்பப்படியே வசதிகள்-உபகாரத்துக்கு ஏற்பாடுகள்-வின்சர் நகரிலே, மன்னன் சிறை வைக்கப்பட்டான்.

மாமன்றம் அனுப்பிய சமரச ஏற்பாடு ஒருபுறம்; படையினர் அனுப்பிய ஏற்பாடு மற்றோர்புறம், மன்னனிடம் வந்தன.

மக்கள் உரிமையை மதித்து ஆட்சி செய்யவேண்டும், அதற்காக மாமன்றம் இயற்றிய சட்டங்களின்படி ஒழுக வேண்டும், எதேச்சாதிகார ஆட்சிக்குத் துணையாக இருந்த துரோகிகளின் மீது மாமன்றம் நடவடிக்கை எடுக்கும்போது குறுக்கிட்டு அவர்களை மன்னிக்கக்கூடாது, மாமன்றத் தேர்தலுக்கு, மன்னன் முகாமில் இருந்தவர்கள் நிற்கலாகாது, என்பன நிபந்தனைகள்.

''மிச்சம் என்ன இருக்கும், முடிதானே!'' என்று அலட்சியமாகக் கூறிச் சார்லஸ், உடன்பாட்டுக்கு வர மறுத்தான்.

படை வரிசையினரோ இதனினும் குறைந்த அளவிலேயே நிபந்தனைகள் விதித்தனர். துரோகிகள் பட்டியல் தயாரிக்கப்படும்போது, முக்கியமானவர்கள் வரையிலாவது மன்னன் குறுக்கிடாமலிருக்கவேண்டும் என்று கேட்டனர். இதற்கும் மன்னன் இணங்கவில்லை.

அரியாசனத்தைத் தூசி துடைத்து அலங்காரம் செய்து, மன்னனை அமரச்செய்து, அவன் எதிரில் கைகட்டி வாய்பொத்தி மாமன்றத்தார் குற்றேவல் புரியக் காத்துக் கிடக்கவேண்டும், அக்ரம ஆட்சிக்குத் துணை நின்றவர்கள் பழையபடி துதிபாடித் தூபமிட்டு, பதவி பெற்றுக் கொழுப்பர்—இதற்கா களம் புகுந்தனர், கஷ்ட நஷ்டம் ஏற்றனர், குருதி கொட்டினர்! மன்னன், எந்தச் சமயத்தும், இழந்த ஆதிக்கத்தைத் திருப்பிப் பெற, ஒரு துரோகக் கும்பலை நம்பி இருந்தான், எனவேதான், துரோகிகள் தண்டிக்கப்பட்டாகவேண்டும் என்ற நிபந்தனையை ஏற்க மறுத்தான்.

ஸ்காத்லாந்திலிருந்தாவது, அயர்லாந்திலிருந்தாவது, உதவி கிடைக்கும் என்ற ஆசை அகலவில்லை. இராணி எனிரிடாவும் முயற்சியைக் கைவிடவில்லை. இந்நிலையில் உடன்பாட்டுக்கு வராமல், ஆனால் அதேபோது உடன்பாடு குறித்துப் பேசிக்கொண்டு காலத்தை ஓட்டுவதே சாலச் சிறந்ததென மன்னன் எண்ணினன்.

படையினர் அமைத்திருந்த கட்டுக்காவலை ஏய்த்துவிட்டு மன்னன் வெயிட் தீவு எனும் இடம் சென்றான். இங்கு கவர்னராக இருந்த இளைஞர், கண்ணியமாக, ஆனால், கண்டிப்புடன் மன்னனை நடத்திவந்தார்.

இராணி எனிரிடாவின் முயற்சியால், கலம் ஒன்று தயாராகிவிட்டது. மன்னன் அதிலேறி பிரான்ஸ் செல்லலாம். பிறகு, ஐரோப்பிய நாடுகளிலே, மன்னராட்சியை ஆதரிப்பவர்களின் துணையைத் திரட்டி, பிரிட்டன்மீது பாயலாம். மாமன்றம் அரும்பாடுபட்டுப் பெற்றவெற்றியை, அழித்திடலாம். வாய்ப்புக் கிடைக்கிறது என்று மன்னன் சார்பினர் எண்ணிக்கொண்டனர். ஆனால் மன்னன் உடனடியாக ஓடிவிட விரும்பவில்லை, ஸ்காத்லாந்துக்காரரிடம் 'பேரம்' பேசிக்கொண்டிருந்தான்.

இதற்கிடையில், மன்னன் தங்கியிருந்த இடத்திலேயே குழப்பம் உண்டாக்கி, மன்னனைத் தப்பிவிடச் செய்வதற்குச் சிறு சிறு முயற்சிகள் நடைபெற்றவண்ணமிருந்தன. மாமன்றம் அமைக்கும் புதிய அரசியல் திட்டம் தங்கள் சுகபோக வாழ்வைக் குலைக்கும் என்று எண்ணிய சுயநலமிகள், இத்தகைய முயற்சிகளைத் தூண்டிவந்தனர்.

''மன்னனைக் காக்க மாவீரரே வாரீர்!
வேந்தனை விடுவிக்கத் திரண்டு வாரீர்!
புரட்சி பொங்குக! மன்னன் வாழ்க!
மன்னருக்காகப் போரிட வருக!''

முரசறைகிறான் கேப்டன் பர்லி என்பான் வெளிப்படையாகவே!

மன்னனோ, மாமன்றப் படையிடம் தோற்றோடினன்—சரண்புகுந்தான்—சிறைப்படுத்தப்பட்டிருக்கிறான். எனினும், மன்னனுக்காகப் போரிடக்கிளம்புக என்று முரசு அறைகிறான்.

மக்கள் முரசு கேட்டனர், கேலி பேசினர்.

பெண்கள் சிலரும், துப்பாக்கிதூக்கி ஒருவனும்தான், இந்த அறப்போருக்குக் கிளம்பினர்! மன்னனுக்கு இருந்த ஆதரவுக்குத் தக்க எடுத்துக்காட்டு!

கலாம் விளைவித்தவன் கூண்டில் தள்ளப்பட்டான்.

பதினெரு திங்கள் இங்கு இருந்தான் மன்னன்—மனதிலே, மக்களை மகிழ்விக்கத்தக்க எந்த முடிவும் கொள்ளவில்லை. இப்பக்கமும் அப்பக்கமும் பார்த்த வண்ணம், தப்பி ஓடத் துணைதேட.

கலம் கடலில் தயாராக இருக்கிறது! கடற்கரை போகக் குதிரையும் தயாராகிவிட்டது! ஆட்கள் வந்துவிட்டனர், துணை நிற்க.

மாளிகை மாடியிலிருந்து, பலகணி வழியாகக் கயிறு கட்டி மன்னன் கீழே இறங்கி, தப்பிச் செல்வதென்று திட்டம். இதனை பயர்பிரேஸ் என்பவன் வகுத்துத் தந்தான்.

பலகணியின் இரும்புக் கம்பிகளின் இடுக்கிலே புகுந்து செல்ல மன்னன் முயற்சித்தான்—தலை நுழைந்தது, உடல் சிக்கிக்கொண்டது, உடன் இருந்தோர் காப்பாற்றினர், தப்ப முடியவில்லை.

இலண்டன் நகர் சென்று இரும்பைத் துளைக்கும் கருவி கொண்டுவர ஏற்பாடாயிற்று.

இரகசியம் வெளியாகிவிட்டது, காவல் பலமாகி விட்டது. மன்னனே தியானம்—தொழுகை, தவருமல் செய்த வண்ணம் இருக்கிருன்.

(தொடரும்)

# அரசியற் கருத்துக்கள்

## [ அன்று முதல் இன்று வரை ]

[பேராசிரியர் இருதயராஜ்]

பாஸிஸம்

20-வது நூற்றுண்டில், கம்யூனிஸக் கொள்கையின் வளர்ச்சியை யொட்டியே, பாஸிஸக் கொள்கையும் உலகில் ஒரு பகுதியில் பிறந்து வளர்ந்தது. முதல் உலகப் போரின் விளைவாக உலகில் தோன்றிய பல புதியக் கருத்துக்களில் பாஸிஸமும் ஒன்று.

மக்களின் நலனைக் குறிக்கோளாகக் கொண்டது ஜனநாயகம். மக்களில் ஒரு குறிப்பிட்ட பொருளாதார வர்க்கத்தின் நல்வாழ்வை விரும்புவது சோஷலிசம், மக்களைப் பற்றியே கருதாமல் சமுதாய உயர்வையே நோக்கமாக, அது ஈடேறமக்களை ஒரு கருவியாக பாவிப்பது பாஸிஸக் கொள்கை.

பலம் பொருந்திய ஒரு அரசு. அதை எதிர்க்கவோ, மறுத்துப் பேசவோ எவருக்கும் உரிமை இல்லை. மக்களுடைய வாழ்க்கை விவகாரங்களில், அது பொருளாதாரத் துறையிலாகட்டும், அல்லது அரசியல், மதத்துறையிலாகட்டும், அரசுக்கு எந்த விதத்திலும் எந்த நேரத்திலும் தலையிடஉரிமையுண்டு என்பதே பாஸிஸக் கொள்கை.

குடிமக்களின் வாழ்க்கை, சமூகம் ஏற்பட்டதிலிருந்துதான் தொடங்குகிறது. எனவே குடிமக்கள் அனைவரும் அரசில் ஒரு பாகம், அரசுக்கு வெளியே ஒருவருமில்லை. அதனுல் அரசினுடைய அதிகாரத்துக்கு எல்லோரும் அடங்கினவர்களே. அதில் வாழும் ஒருவன் தன்னுடைய உரிமைகளைப் பற்றிப்பேசுமுன் அரசுக்குத் தான் ஆற்றவேண்டிய தன்னுடைய கடமைகளை உணர்ந்துகொள்ள வேண்டும். மக்களின் உரிமைகளைப் பற்றி அல்ல பாஸிஸ்டுகள் கவலைப் படுவது. அரசுக்கு அதன் குடிமக்களின்மேல் இருக்கும் ஆதிக்கத்தைப் பற்றி, அதை நிலை நாட்டுவதைப் பற்றித்தான் அவர்களுடைய அக்கறை யெல்லாம்.

இந்தக் கொள்கை முதன் முதல் பரவினது இத்தாலியில்தான். முதல் உலகப் போருக்குப்பின், அதில் ஈடுபட்டிருந்த நாடுகளில் எல்லாம் புதிய அநுபவங்கள் ஏற்பட்டன. இத்தாலியில் ஏற்பட்ட அநுபவங்கள் நூதனமானவை. கள்ள மார்க்கெட்டுகள், பணவீக்கம் விலையேற்றம், வாழ்க்கைச் செலவு அதிகரித்து அதனுல் அதிகக் கூலிக்காக கிளர்ச்சிகள், வேலை நிறுத்தங்கள், இவை போதாதென்று போருக்குச் சென்று திரும்பிய போர் வீரர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் — இவை யெல்லாம் நாட்டை அலைக் கழித்தன.

இவை யெல்லாவற்றையும்விட இத்தாலி சர்வதேச அரங்கில் அடைந்த ஏமாற்றம் மிகப் பெரிது. வெற்றி பெற்ற நாடுகளின் வரிசையில் இத்தாலியின் பெயர் காணப்பட்டபோதிலும், போரினுல் கிடைத்த இலாபங்களை, வெற்றி பெற்ற இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகள் தமக்கென்றே வைத்துக்கொண்டு, தங்களுடைய பக்கத்தில் இருந்து போரிட்ட இத்தாலிக்கு பெயரளவுக்கு ஏதோ நன்றி கூறிவிட்டு இலாபத்தில் பங்கு தராமல் ஏமாற்றிவிட்டன. பங்கு கிடைக்கவில்லை என்ற ஏமாற்றத்தைவிட ஏய்க்கப்பட்ட அவமானம் இத்தாலிக்குப் பேரிடியாகிவிட்டது. பாரிஸில் கூடிய சமாதான மகாநாட்டிலிருந்துகூட இத்தாலி விலகிக்கொண்டு தன்னுடைய அதிருப்தியைக் காட்டிக் கொண்டது.

உள்நாட்டில் பொருளாதார சீர்கேடு, அதனுல் குழப்பம். வெளியே ஏமாற்றம் அதனுல் ஏற்பட்ட அவமானம்—இந்த சூழ்நிலையைச் சாதகமாக்கிக்கொண்டு மக்களிடையே செல்வாக்குத் தேடிக்கொண்டான் முசோலினி. மன்னனுல் பிரதம மந்திரியாகநியமிக்கப்பட்டான். முதலில் ஜனநாயகத்தை மதிப்பது போலவும், மக்கள் மன்றத்துக்கு மரியாதை செய்வதைப் போலவும் நடித்தான். ஆனுல் காலக்கிரமத்தில் மக்களின் பிரதிநிதிகளடங்கிய மாமன்றத்தைப் பற்றி நினைப்பேயின்றி ஏதேச்சாதிகாரமாக நடக்கத் துவங்கினுன்.

மாமன்றத்துக்கு வெளியே முசோலினிக்கு முரணுக யாராவது பேசினுல் அல்லது அவரை எதிர்த்தால் பாஸிஸ ஆயுதந் தாங்கிய போலீஸ் படை தாக்க ஆரம்பித்தது.

ஐந்தாறு ஆண்டுகளில் அடக்கு முறையை அளவுக்குமேல் பிரயோகித்து நாட்டிலேயே எதிர்ப்பும் கண்டனக் குரலும் கிளம்பாத வழிக்குச் செய்துகொண்டான் முசோலினி. முசோலினியின் பாஸிஸக் கட்சிக்கு எதிர்ப்பு செய்த அரசியல் கட்சிகளெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன.

பெயரளவுக்கு ஆட்சி பீடத்தில் பொம்மையாக வீற்றிருந்தார் மன்னர். ஆனால் சட்டங்களும், ஆணைகளும் பிறப்பிக்கப் பட்டன பிரதம மந்திரியாரால். மந்திரிகள் வேறு பலர் இருந்தனர். ஆனால் அவர்களெல்லாம் முசோலினிக்கு அடங்கினவர்கள். அவரால் நியமிக்கப்பட்டவர்கள். இத்தாலியில் ஒரே அரசியல் கட்சி ஆட்சி, பாஸிஸ ஆட்சி வேரூன்றியது.

பாஸிஸக் கட்சியும் பலம் பொருந்தியதாக அமைந்தது. அதில் அங்கத்தினராக விரும்பினவர்களுக்கு சில பரீட்சைகள் வைக்கப்பட்டன. தளபதி முசோலினியின் கட்டளைகளைக் கேள்வி கேட்காமல், தட்டாமல், தயங்காமல் கீழ்ப்படிவதாக அவர்களிடமிருந்து உறுதிமொழிப் பெறப்பட்டது. எனவே கட்சியிலும் சர்வாதிகாரம், அரசிலும் சர்வாதிகாரம். "என்னுடைய கட்சி" என்று எவ்வளவு உரிமையோடு தளபதி முசோலினி கூறினாரோ அதே உரிமையோடும் உண்மையோடும் 'என்னுடைய அரசாங்கம்' என்றும் கூசாமல் கூறினர்.

(தொடரும்)

## திருமணம்

திருமழப்பாடி (திருச்சிமாவட்டம்)யில் 15-9-55 வியாழன் காலையில் நாடகப் பேராசிரியர் டி.பி.பொன்னுசாமி அவர்கள் தலைமையில், கோரையாறு தலைப்பு திரு டி. பொன்னுசாமி(பிள்ளை)அவர்களின் மகள் செல்வி அம்சவல்லியை வாழ்க்கைத்துணைவியாக ஏற்கும் விழாவுக்கு வருகைதரக் கோருகிறேன்.

தங்கள்,
பி.ஏ. தெட்சணாமூர்த்தி.
(நடிகர்)

## கிளைக் கழகங்கட்கு வேண்டுகோள்

1956-ம் ஆண்டு திராவிடர் நாட் குறிப்பில்' தி. மு. க. கிளைகளின் விவரங்களை வழக்கம்போல் வெளியிட இருப்பதால், ஒவ்வொரு கிளைக்கழகத்தின் செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் இவர்களின் பெயர்களையும், எந்த மாவட்டத்தைச் சேர்ந்தது என்ற விவரத்தையும், 5-10-55-க்குள் கிடைக்கும்படி, 'போர்வாள்' 147, பவழக்காரத்தெரு, சென்னை, என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு எல்லா தி. மு. க. கிளைகளின் செயலாளர்களும் வேண்டிக்கொள்ளப் பெறுகிறார்கள்.

பொறுப்பாளர்
போர்வாள்

2-ம் பக்க தொடர்ச்சி

காங்கிரஸ் கட்சி, நாட்டாட்சியை நடத்திச் செல்வதற்கு மக்களின் 'அனுமதி'யைப் பெற்றுவிட்டது. அந்த அனுமதி பெறுவதற்கான 'தேர்தல்' பெரியதோர் கடினமான முறையாக இருப்பதால், அதிலே ஈடுபடவும் வெற்றிகாணவுமான திறமும் தரமும், மற்றப் பல கட்சிகளுக்கு எளிதில் கிடைப்பதில்லை. எனவே காங்கிரஸ் கட்சி, 'கேட்பாரற்ற' நிலையைப் பெற்றுவிடுகிறது. கைதூக்கும் உறுப்பினர்கள், கண்சிமிட்டும் மந்திரிகள், களிப்பூட்டும் கவர்னர்கள்—என்று கொலுஇருக்கிறது. எதிர்க்கட்சி உருவான முறையில் இல்லை. எனவே ஆட்சி மன்றங்களில் அமரும் வாய்ப்புப் பெற்றோர், குறிப்பாக, ஆளும் கட்சியிலே இடம் பெற்றோர், இசை அரங்கிலே அமர்ந்து தாளம்போடும் தனவான் போலவும், நடன அரங்கிலே அமர்ந்து நாற்காலியில் நாட்டியமாடும் கனவான்போலவும், 'ரசிகர்'களாக முடிகிறது! வேடிக்கை! கேலி! கிண்டல்! குத்துவது, கிளறுவது, நுகருவது களிப்பது, சிரிப்பது, சிங்காரப்பொம்மையாக இருப்பது, என்று இவ்விதமெல்லாம் இருக்க முடிகிறது. மத்யப்பிரதேசத்தில் ஏழையின் நிலை பற்றிய அக்கறை எவ்வளவு அழகாக வெளிப்பட்டது என்பதை மிஸ்ரா காஜி உரையாடல் வெளிப்படுத்துகிறது.

நமது மாநில ஆட்சிமன்றம் பரவாயில்லை, பெருமளவுக்கு. இங்கு 'எதிர்க்கட்சி' உருவாகி, உருகி, உடல் கருகி, உள்ளீரல் பற்றி, உருத்தெரியாமல் போய்விட்ட போதிலும், ஒருவரிருவருக்கு உள்ள உரம் ஒரோர் சமயம் வெளிப்படக் காண்கிறோம்.

"இந்த மந்திரிகள் சதா ஊர் சுற்றிக் கொண்டு இருப்பதுதான் வேலையாக வைத்துக்கொண்டிருக்க வேண்டுமா? அலுவலகத்தில் அமர்ந்து வேலைகளைக் கவனிக்காமல், சதா சுற்றுப்பயணம்தானா!! டீ கடை திறக்கப்போவதும், நடைபாதை திறக்கப்போவதும்தானா மந்திரிகளின் வேலையாக அமைய வேண்டும்?" சட்டசபை உறுப்பினர் ஒருவர் இதுபோலக் கேட்டார். அமைச்சர் உடனே, கேள்வி கேட்டவர்மீது மக்களை ஏவி விடலாம் என்ற எண்ணத்துடன், மிகச் சாமர்த்தியமாகப் பதிலளிப்பதாக எண்ணிக்

## முகவரி மாற்றம்

—[]—

எனது சித்திரக்கூடம் இப்போது கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளதென்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அய்க்கன்
கமர்ஷியல் ஆர்ட்டிஸ்ட்
242, தம்புசெட்டித்தெரு
சென்னை 1.

கொண்டு, "மக்களாட்சிக் காலத்தில், டீ கடை திறப்பதும், நடைபாதை திறப்பதும்தான் முக்கியமான பணி; மக்களுக்கான பணி; அரண்மனைகளைத் திறப்பதல்ல!" என்று கூறினார்.

பாபம், அமைச்சர் இதைச் சொன்னதும், கேள்விகேட்டவர் மீது பொதுமக்கள் கடுங்கோபமும் வெறுப்பும் கொள்வர், அரண்மனைகளுக்காகப் பரிந்துபேசுகிறார் என்று எதிர்ப்பர், ஏழைகளை ஏளனமாகப் பேசுகிறார் என்று சீறுவர், என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருந்திருப்பார். அந்த உறுப்பினர் அப்படியொன்றும் சாமான்யராகத் தெரியவில்லை; அவர் சொன்னார்.

"அதுசரி ஐயா, அமைச்சரே! நூறு ரூபாய் பெறுமானமுள்ள நடைபாதையைத் திறந்துவைக்க, மந்திரிகள் சென்று, 500 ரூபாய் அந்த வைபவத்துக்காகச் செலவிடுகிறீர்களே; பொதுமக்கள் பணம் இப்படியா வீணாகவேண்டும்? விரயமாக வேண்டும்?" என்று கேட்டார்! அமைச்சர் என்னசொல்லுவார்? புன்னகையைக்காட்டி இருக்கக்கூடும், அதிகமாக வாட்டாதீர் என்று கண்ணால் கெஞ்சியிருக்கக்கூடும்.

மக்களைப்பற்றிக் கவலையற்று இருக்கும்போக்கும், மக்களை ஒரோர் சமயம் மயக்குவதற்காக, நூறு ரூபாய் திட்டத்தை 5 நூறுரூபாய் செலவிட்டு வைபவமாக்கிக் காட்டுவதும், ஆகிய இருமுறைகள் தெரிகின்றனவேயன்றி, மக்களாட்சியின் மாண்பு விளங்கிடத்தக்க நினைப்போ, நடவடிக்கையோ தெரியக்காணோம். கடிவாளமற்ற குதிரை போலத்தானே எதிர்க்கட்சியற்ற ஆட்சி இருக்கும்.

★

# பேய்க் கூச்சல்!

அவருக்கு இந்தப் 'பேய்க் கூச்சல்' துளியும் பிடிக்கவில்லை! எங்கு பார்த்தாலும் ஒரே இரைச்சல்! வெட்டுவதும் தட்டுவதும், வெடிப்பதும் வடிப்பதும், உருக்குவதும் வார்ப்பதும், அப்பப்பா! சகிக்க முடியவில்லை என்கிறார்!! அங்கே தொழிற்சாலை, இங்கே தொழிற்சாலை! பல இடங்களில் உலைக்கூடங்கள்! புகைக்கூண்டுகள், புகையைக் கக்கிய வண்ணம் உள்ளன! மோட்டார் தொழிற்சாலை, சைகிள் தொழிற்சாலை, சிமிட்டித் தொழிற்சாலை நூலாலை, என்று கூறுகிறார்கள்! இந்த ஆலைகளிலிருந்து கிளம்பும் பேய்க் கூச்சலும் புகையும், அவருடைய காதையும் கண்ணையும் மட்டுமல்ல கருத்தையே கசக்கிவிடுகிறது! சேச்சே! என்ன பேய்க்கூச்சல்! என்ன பேய்க்கூச்சல்! என்று வேதனையுடன் கூறுகிறார்.

இங்கே என்ன அப்படியா தொழில் பெருகிவிட்டிருக்கிறது, நாளெல்லாம் 'யந்திரஒலி' கிளம்பியா காதைக் குடைகிறது, பாலைவனத்துப் பேரீச்சமரம்போல அங்கொன்றும் இங்கொன்றும், பசுமை குறைந்து சிலவும், பட்டுப்போகும் நிலையில் பலவும்தானே இருந்திடக் காண்கிறோம், இந்த நிலையில் நாடு இருக்கும்போதா, 'பேய்க் கூச்சல்' என்கிறார், என்று எவருக்கும் கேட்கத் தோன்றும்.

இப்போதும், நாடு காணச் செல்லும்போது, கண்களை முதலில் அழைப்பது கோயிற் கோபுரங்கள் தாம்! காதுகளுக்கு அதிர்வேட்டுச் சத்தமும், கண்ணுக்கு வாணவேடிக்கையும் விருந்தாக அளிக்கப்படுவதே பொது நிலையாக இருந்திடக் காண்கிறோம். மற்ற மற்ற நாடுகளிலே, மனிதனுக்குத் துணைபுரியவும், உற்பத்தியின் அளவையும் வகையையும் அதிகமாக்கவும், 'யந்திரம்' பெருமளவுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது; இங்கு 'யந்திரம்' மிக மெல்லிய குரலில்தான் பேசுகிறது; இதற்கே அவர் 'பேய்க் கூச்சல்' என்கிறார்.

*

குளத்தங்கரையில் வேப்பமரத்தடியில் உட்கார்ந்துகொண்டு கேசவபட்டரும், ராமச்சந்திரபட்டரும் பேசுகிறார்கள்.

கேசவபட்டர்:- ஓய்! வேதம் இருக்கும்போது உபநிஷத் வேறு தேவை என்கிற எண்ணம் ஏன் நம்ம பெரியவாளுக்குத் தோன்றிற்று; சொல்லும் பார்ப்போம்.

ராமச்சந்திரபட்டர்:- ப்ரமாதமான கேள்வி கேட்டுவிட்டதாக உம்மோட அபிப்பிராயமோ! மோர் இருக்கும்போது ஏன் அதைக் கடைந்து வெண்ணெய் எடுக்கிறா, சொல்லும், கேட்போம்.

கே:- உம்ம ஆத்திலே மோர் கடையறா, வெண்ணெய் எடுக்கறா! நீர் கொடுத்து வைத்தவர், என்னைச் சொல்லும்...

ரா:- உமக்கென்ன ஓய்! நெய்யாவே கிடைத்துவிடறது, டின் டின்னாக...

கே:- யார் சொன்னா ஓய், இந்த அபாண்டம்.

ரா:- உள்ளதைச் சொன்னா கோபம் வர்ரதுதான் பிரபஞ்சத்திலே சர்வசாதாரணமாச்சே...

கே:- ஆஹாஹா! பிரபஞ்ச இரகசியமத்தனையும் அறிஞ்சிண்ட பெரிய மகான் இவர்...

ரா:- நேக்குத் தெரியாது ஓய், உமக்குத்தானே பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கிறபோதே பிரம்மதேவன் சொன்னார்...

கே:- ஓய்! கேலிக்குப் பேசறீர் இது போல; ஆனா ஒரு விஷயம் தெரியுமோ? என் பெரிய மாட்டுப் பொண்ணு இருக்கா பாருங்கோ, அவளுக்கு, அடுத்த புதன் நிச்சயமாப் பிரசவம்னு சொன்னேன், அதே போலே பிறந்தது. அவகூடச் சொன்னா, பிரம்மதேவன் இவரிடம் முன்னாடியே விஷயத்தைச் சொல்லிவிட்டிருப்பார் போலிருக்குன்னு...

தொலைவில் எங்கோ உலைக்களத்தில் சம்மட்டி அடிச் சத்தம்! வேதம், உபநிஷத்பற்றிப் பேசத் தொடங்கி, "பெரியமாட்டு பொண்ணோட பிரசவம்" பற்றிய ரசமான விஷயத்துக்கு வந்த அந்தப் பெரியவர்களுக்கு, சம்மட்டிச் சத்தம் கர்ண கடூரமாக இருந்தது; கொஞ்ச நேரம் 'விச்ராந்தியாக' இருக்க விடமாட்டேனென்கிறார்களே என்று கோபம் வந்தது. அங்கு வந்தவனைப் பார்த்துக் கேட்டனர்.

"அடே! அப்பா! அது என்னடா காதைத் துளைக்கும் சத்தம்"

"உலைக்களத்துச் சத்தம்! வாள், வடித்தெடுக்கிறார்கள்"

"நாசமாப்போச்சு! நாங்க கொஞ்ச நேரம் விச்ராந்தியா உட்கார்ந்திண்டு, வேத விசாரணையில் ஈடுபட முடியவில்லையே! வாள் வடிக்கிறாளாம், வாள்! பேய்ச் சத்தமான்னா இருக்கு."

"வாள்வடிக்கும் இடத்தில், நெருப்புக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு, பழுக்கக் காய்ச்சிய இரும்பை, சம்மட்டி கொண்டு அடித்து அடித்து, வாளாக்குகிறார்கள். வியர்வை பொழிகிறது! கடினமான வேலை."

"காதைக் குடைகிறது சத்தம்"

"வாள் வடித்துத்தா அந்த உத்தமர்களும் அதை ஏந்திச் சென்று களம் புகுந்து கடும் போரிட வீரர்களும் கிடைக்காவிட்டால் ஸ்வாமிகளே! உங்களுடைய வேதாந்தவிசாரணை கூட நடக்க முடியாதே."

"யாரடா இவன் அறிவு கெட்டவன், நாஸ்தீகப் பயல்! நாஸ்தீகன்!"

*

மன்னராட்சிக் காலத்தில் மகானுபாவர்களுக்கு உலைக்களச் சத்தம் கர்ண கடூரமாக—பேய்க் கூச்சலாக இருந்தது! 'விச்ராந்தியாக' இருக்க முடியவில்லையே என்று வருத்தப் பட்டனர்.

இப்போது அன்பர் ஆச்சாரியாருக்கு, தொழிற்சாலைகளிலிருந்து கிளம்பும் சத்தம் பேய்க் கூச்சலாக இருக்கிறது! சகிக்கமுடியவில்லை என்று கூறுகிறார்! கூறுகிறாரா? எழுதுகிறார்!

எஸ். கே. டே. என்பவர் கிராம வாழ்க்கை குறித்து ஒரு ஏடு தீட்டியுள்ளார். அவர் ஆச்சாரியாருக்கு அதனை அனுப்பி அவருடைய கருத்தைக் கேட்க, ஆச்சாரியார் மிகுந்த வேதனையுடன் ஒரு கடிதம் தீட்டியிருக்கிறார்.

'என்னைச் சுற்றிலும் கிளம்பும் சத்தம் எனக்குப் பயங்கரமான மனச்சங்கடம் தருகிறது. பெரிய தொழிற்சாலைகளிலிருந்து கிளம்பும் இரைச்சலும், அங்குஉள்ள புகைக் கூண்டுகள் கக்கும் புகையும், என் மனதை வெகு பாடுபடுத்துகிறது" என்று ஆச்சாரியார் எழுதுகிறார்.

நாட்டு வளத்தைப் பெருக்கவும், வேகமாக வளர்ந்துவரும் மக்கட் தொகைக்குத் தேவைப்படும் வசதிகளைப் பெறவும், அனைவருக்கும் உழைத்துப் பிழைக்கும் வாய்ப்புக் கிடைக்கவும், இந்த இரைச்சலும் புகையும் தேவைப்படுகிறது. இந்த இரைச்சல் கிளம்பாவிட்டால்; ஐயோ! அம்மா! அப்பா! என்ற கூக்குரல் கிளம்பும். ஆச்சாரியார் இந்த 'இசை'யைக் கேட்கவிரும்புகிறார் போலும்! தொழிற்சாலைகளின் புகை கிளம்பினால்தான், பாட்டாளி மக்களின் வயிற்றில் மூண்டிடும் பசித் தீ அடங்க முடிகிறது! இல்லையேல், அவர்கள் தொழிலின்றித் துயருற்று, சிறகொடிந்த பறவையாகி, கொடுமை கொட்டுவதால், கோவெனக் கதறித் தீரவேண்டும். அன்பர் ஆச்சாரியார் இந்த 'ஆலாபனம்' வேண்டுமென்று அவா கொண்டுள்ளார் போலும்-

தொழிற்சாலைகள் கிளப்பும் சத்தத்தைப் பேய்க் கூச்சலென்று எண்ணும் இவர் போன்றாரின் செவிகளுக்கு, விருந்தளிக்க, வேத ஒலியும் அதன் துணையுடன் கிளம்பும் வாகனமேறிய சாமியைத் தூக்கிச் சுமக்கும் பரிதாபத்துக்குரியவர்களின் பெரு மூச்சொலியும், பஜனைச் சத்தமும் அதனைப் பக்திச் சிரத்தையோடு நடத்திவைக்கும் பெரிய மனிதர் தன்னிடம் அடிமையாக இருப்பவனைச் சவுக்கால் அடிக்கும்போது எழும் சுளீர்! சுளீர்! எனும் சத்தமும், நாட்டியமாடிடும் நளினிகளின் சிலம்பொலியும், தேவைப்படுகிறது—தொழிற்சாலை கிளப்பும் சத்தமோ, பயங்கரமான சங்கடமூட்டுகிறது! எவ்வளவு கடினமான இதயம் கொண்டிருந்தால், ஏழைக்கு இதமளிக்கும் வாய்ப்பாக வந்துள்ள தொழிற்சாலைகளைக் கண்டு இந்தத் தூயவர் துடிதுடிப்பார் என்றெண்ணிப் பார்க்கவேண்டுகிறோம்.

உழவு, கைநெசவு எனும் இரு தொழில்களை மட்டுமே நம்பிக் கொண்டு, ஆச்சாரியார் கூறும் அந்தப் பேய்க்கூச்சல் இங்குஎழவே கூடாது என்று தடுத்துவிட்டால், அமைதி நிலவும்—மயான அமைதி! ஆச்சாரியார் அந்த அமைதியையா விரும்புகிறார்?

ஆச்சாரியார் கடிதத்தில் மற்றோர் இடத்தில் குறித்திருக்கும் கருத்து, வரவேற்கத்தக்கதாக இருப்பதுடன் அவருக்கே நினைவு படுத்தவேண்டியதாகவும் அமைந்திருக்கிறது.

"நான் தங்கள் புத்தகங்களைப் படித்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளவே இந்தக் கடிதம்.

ஆனல் அதற்குமேல் வேறெதுவும் கூறும்படி என்னைக் கேட்க வேண்டாம். **என்னமோ, என்னைப் பொறுத்தவரையில் எல்லாம் தீர்ந்துவிட்டது என்றே தோன்றுகிறது. இனி நாட்டின் பிரச்சினைகளை மற்றவர்கள்தான் கவனித்துக்கொள்ள வேண்டும்"**

அருமையான கருத்து இது. ஆச்சாரியார் தமது சகாப்தம் முடிந்தது (ஆயுளைக் குறிப்பிடவில்லை; அத்தகைய அற்பத்தனம் நமக்கு எழாது) என்றே முடிவு செய்துகொள்ள வேண்டும். நாட்டிலே கிளம்பியுள்ள பல்வேறு பிரச்னைகளுக்கு, காலத்துக்குத் தக்கதான அறிவுரை தரும் நிலையும் நசித்துப்போய்விட்டது. மாமரத்திலே தலைகீழாகத் தொங்கிக் கொண்டு புளியம்பழம்பற்றிக் கனவு காணும் வௌவால் போன்ற நிலையில் அன்பர் இருக்கிறார். தொழிற்சாலைகள் பேய்ச்சத்தமிடுகின்றன என்று, தொழில் தளிர்நடை போடும் இப்போதே இவர் கூறுகிறார் என்றால், இவருடைய அறிவாற்றல், முற்போக்குக்கு எங்கே பயன்படப் போகிறது.

ஆற்றோரத்தில் அமைக்கப்பட்ட ஆஸ்ரமங்களிலே அமர்ந்து கொண்டு, யாககுண்டத்திலே தீ மூட்டிப் புகைகிளப்பி, சூழ உட்கார்ந்துகொண்டு மந்திரங்களை ஜெபித்துக்கொண்டிருந்த, காலத்தை எண்ணி அது மீண்டும் வராதா என்று பகற் கனவு காண்கிறார்!

"ஹே! ராஜன்! ஈரேழு பதினாலு லோகங்களுக்கும் இதமளிக்கும் யாகம் செய்யத் திட்டமிட்டிருக்கிறேன்; அதற்கான திரவியம் உன்னிடம் பெறவே இங்கு வந்திருக்கிறேன்" என்று தவசிகூறிட, அவருக்குத் தாசானுதாசனாகி மன்னன், கேட்டதைக் கொட்டிக் கொடுத்த காலம் இருந்ததாகச் சொல்கிறார்களே அதை மீண்டும் காண விழைகிறார் இந்த வேதியர்!

அடுத்த இதழில்

சி. என். எ.

அளிக்கும்

சமூகசேவகி

சாருபாலா

சுவைமிக்க சிறுகதை.

இவருடைய நினைப்புக்கு நேர் மாருக உலகம் செல்கிறது—இந்த நாடும் செல்கிறது — எனவே உள்ளம் வெதும்பிக் கூறுகிருர், இனி நான் தீர்ந்துபோன மனிதன்-பட்டுப்போகத் தொடங்கிவிட்ட மரம்—என்ற கருத்துப்பட.

இனி நாட்டின் பிரச்சினைகளைக் கவனித்துக்கொள்ள இவராலும் ஆகாது, நாடும் இவரை ஏற்றுக் கொள்ளவும் முடியாது. பட்டது போதும் இனிப் படமுடியாது துயரம், என்று கூறுதார் இல்லை!

ஆலையின் சங்கொலி மேலும் மேலும் முழங்க வேண்டும்—ஆலயச் சங்கொலியால் 'ஆத்மபசி'யைப் போக்க முடியுமென்று வைத்துக் கொள்வதாயினும், அந்த ஆத்மாவுக்கு இடமளிக்கும் உடல் வேத ஒலியால் வளர்ந்துவிடாது! யந்திரச் சக்கரங்கள் வேகமாகவும் அதிகமான அளவிலும், நாடெங்கும் சுழலவேண்டும்-பகவானுடைய சக்ராயுதம் பவப்பிணியை அறுத்திட வல்லது என்று கூறுவோர் கூறிக்கிடக்கட்டும், இல்லாமையை ஒழித்தாக வேண்டுமானல் யந்திரச் சக்கரங்கள் சுழலவேண்டும்! புகை எழவேண்டும் — ஓமப் புகையால் மக்களுக்குச் சாதித்துத்தர முடியாது போய்விட்ட, உண்டி, உடை, உறைவிடம் ஓய்வுநேரம், உள்ளக் களிப்புக்கான வாய்ப்பு, இவைகளை அனைவரும் பெறுவதற்காக.

உருண்டோடிப் பேரொலி கிளப்பி வரும் ஆறுகள்! ஓங்கி வளர்ந்து மேகங்களை மாலையாகக் கொண்டுப் பெருமிதமடையும் மலைகள்! விதை தூவுங்கள், நெற்குன்றைப்பெற்றளிக்கிறேன்என்று அழைத்திடும் வளமான வயல்கள்! ஏமாளியே! ஏமாளியே! உனக்குத் தருவதற்காகவென்றே நான்நீண்ட காலமாகச் சேமித்து வைத்திருக்கும் தங்கம் இங்கே இருக்க, அதைக் கண்டறிந்து எடுக்கும் வகை அறியாது, பஞ்சையாய், பராரியாய் உழன்றுகொண்டு, அண்ணாந்து பார்க்கிருய், ஆயாசப்படுகிருய், கீழே கிடக்கிறது நவநிதி, அதன்மேலே நடந்துகொண்டே, அந்தரத்தில் நீர் பாய்ச்சித் தருவளர்த்து விந்தைமிகு கனிதேடி அலைகிருயே, என்னவென்று சொல்வது உன் மந்தமதியினை என்று கேட்டு நகைக்கிருள் நிலமடந்தை! வளம் இருக்கிறது, வாட்டம் கொட்டுகிறது! தங்கம் இருக்கிறது, தரித்திரம் தலைவிரித்தாடுகிறது! உழைக்கிருன் உருமாறிப் போகிருன்! இது இந்நாளில் நம் நாட்டு நிலை. விஞ்ஞானம் உலகில் மற்ற நாடுகளுக்குத் தொழில் துறையிலே பயன்படுத்தப்பட்டு, உழைப்பின் கடினம் குறைந்து, பலன் மிகுந்தது. அதே முறையில் இங்கு வெகுவிரைவில் விஞ்ஞானம் தொழிலுக்குத் துணைநிற்கும் நிலை ஏற்பட்டாகவேண்டும்.

தொழிற்சாலைகள் பெருகவேண்டும்! யந்திரங்கள் மிகுந்து காணப்படவேண்டும்! யந்திர உற்பத்தியும் வேண்டும்! இவைதமைத் திறம்படப் பெறுவதற்கான ஆய்வுச் சாலைகள் பலப்பல அமைக்கப்படவேண்டும். இது இப்போது, உடனடியாகக் கவனிக்கப்படவேண்டிய பிரச்சினை! ஆச்சாரியாரோ தொழிற்சாலைகள் பேய்க் கூச்சலிடுகின்றன, என்று ஆயாசப்படுகிருர்! என்னுடைய காசியும் அரித்துவாரமும், புதிய திட்டங்கள் உருவெடுக்கும் இடமும் தொழிற்சாலைகள் வளர்ந்துள்ள இடமுமே என்ற கருத்துப்பட நேருபண்டிதர் பேசவாவது செய்கிருர், இந்த ஆச்சாரியார் இதனைப் பேய்க் கூச்சல் என்கிருர்! மார்புடன் ஒட்டிக்கொண்டு கிடக்கும் குழவி, பால் ஊறப்பெருத நிலையினுல், பதறி அழுகிறது! நோய் நொடி தாக்கும்போது, தாங்கும் சக்தியற்று, மரணமூச்சு கிளப்பிடும் ஏழையர் இலட்சக்கணக்கில்! இவர்களுக்கு ஓரளவுக்கேனும், ஆலைச் சங்கும், புகைக் கூண்டும், யந்திரத் தொழிற்சாலையும் வசதிதர முயற்சிக்கின்றன! இடையில் முதலாளி குறுக்கிட்டுக் கொள்ளை அடிக்கிருன், கொழுக்கிருன் கொடுமைப்படுத்துகிருன், உண்மை. அவன் கொட்டத்தை அடக்குவதற்கான திட்டம் தீட்டவேண்டுமேயன்றி, தொழில் வளர்ச்சியையா, கண்டிப்பது, பேய்க் கூச்சலா, தொழிலுலக ஒலி. இல்லை, இல்லை இதோ, இதோ, உனக்காகத்தான், உன் தேவைகளுக்காகத்தான், மாடென உழைப்பவனை மனிதனுக்கத்தான், நான் சுற்றுகிறேன், சுழலுகிறேன், வெட்டுகிறேன் ஒட்டுகிறேன், விதவிதமாகப் பணியாற்றுகிறேன், என்று 'அபயம்' அளிக்கும் முழக்கத்தை ஆச்சாரியார் பேய்க்குரல் என்கிருர் - பித்தமல்ல, அவருடைய சித்தமிசை குடிகொண்ட கொள்கை அவ்வளவு பிற்போக்கானது, அதனுல்! எனவே இத்தகையவர்கள், நாட்டுப் பிரச்சினைகளைக் கவனிக்கும் பொறுப்பு கொள்ளக் கூடியவர்களல்ல; வேறு ஆட்கள் தான் கவனித்துக்கொள்ள வேண்டும்; கவனித்துக்கொள்ள ஆட்கள் இருக்கவும் செய்கிருர்கள். எனவே ஆச்சாரியார் நிம்மதியாக, தமது வயோதிகப் பருவத்தை, விராடபர்வம், சுந்தரகாண்டம் போன்ற சத்விஷய பாராயணத்திலே செலவிடுவதுடன் அமைவது, நல்லது; நாட்டுக்கு. அதை மறந்து, காரணமற்று பிரச்சினைகளில் நுழைவது, அவருக்கும்நல்லதல்ல, நாட்டுக்குப் பெருந்தீங்கும் விளையும். அவருடைய இத்தகைய பிற்போக்குப்பேச்சைத்தான் விளக்கம் பெற்ற மக்கள், பேய்க் கூச்சலென்பர். ★

## மன்றல் அழைப்பு

அன்புடையீர்,

வரும் 12—9—55 திங்கள் காலை 9மணிக்கு சென்னை புரசைபாக்கம் நெடுஞ்சாலை 54 எண் இல்லத்தில் அண்ணு அவர்கள் தலைமையில் நிகழ இருக்கும் என் தம்பி செல்வன் க. திருமாறன் (விருதுநகர் செந்திக்குமரர் கல்லூரி தமிழ்விரிவுரையாளர்) கீவளூர் திரு ஏ. சுப்பையா அவர்கள் மகள் செல்வி பத்மாவை வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் விழாவுக்கு வருகைதருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்

சென்னை,
8-9-55.

**க. அன்பழகன், எம்.ஏ.**
பச்சையப்பன் கல்லூரி

... 25 திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்